THE

# S. B. K. HIGH SCHOOL

## ANNUAL

CONNEMARA PUBLIC LIBRARY
1 - JUN 1955
MADRAS

உலகெங்கும் அறிவொளி வீசுக

March 1951.

# A brief history of the School.

This institution, founded in 1889 by the Nadar community of Aruppukottai emerged by progressive advancement into a Middle School in 1903. It was raised to the status of a High School in the year 1920 and permanent recognition was accorded in 1935. The year 1949 stands out as another important milestone in the history of the School in that it marked the completion of 60 years of glorious service of the School in the cause of education.

Present Manager & Correspondent:

P. V. S. M. Ratnam.

Headmaster: A. Samuel Durairaj M. A. B. T..

---

# Editorial Board.


Mr. A. Samuel Durairaj M. A. B. T., — President.

1. ,, M. Muthuveerappan B. A. L. T.,

2. ,, Vidwan N. Mahadevan,

3 ,, M Sundaram VI. B. — Minister for Education: Student Republic

# S. B. K. HIGH SCHOOL

## ARUPPUKOTTAI.

CONNEMARA PUBLIC LIBRARY
1 - JUN 1955
MADRAS

உலகெங்கும் அறிவொளி வீசுக.

**ANNUAL NUMBER**

March '51.

# CONTENTS.


| | | PAGE. |
|---|---|---|
| 1. | Messages | |
| 2. | Editorial | 1 |
| 3. | பள்ளி வாழ்த்து. | 2 |
| 4 | The community and you. | 3 |
| 5. | மூன்று மாத நோட்டீஸ். | 9 |
| 6. | புறப்புண்ணாணுதல். | 12 |
| 7. | புரளுது பாரீர்! | 16 |
| 8. | Reward for .. ? | 17 |
| 9. | Vana Mahotsava | 19 |
| 10. | Just before the Examination | 20 |
| 11. | நினைவதான் கனவு. | 22 |
| 12. | தமிழன்னையின் ஆணை. | 26 |
| 13. | தமிழ்ப் பெருமை. | 27 |
| 14. | அடக்கம். | 30 |
| 15. | உல்லாசப் பிரயாணம். | 31 |
| 16. | "பாட்டு" | 35 |
| 17. | பொடியின் மகத்துவம். | 36 |
| 18 | வெங்காயம் கேட்ட வரம். | 38 |
| 19. | எங்கள் பாடசாலைக் கிணறு. | 39 |
| 20. | ஆபிரஹாம் லிங்கன். | 41 |
| 21. | அன்றும் இன்றும். | 45 |
| 22. | பெருமை கொள்கிறேன். | 51 |
| 23. | ஒரே அறை! ...... | 53 |
| 24. | தலைமையாசிரியர் அறிக்கை. | 60 |
| 25. | பள்ளிமாணவன் அறிக்கை | 64 |
| 26. | மாணவிகள் சங்க ஆண்டு அறிக்கை | 67 |
| 27 | Physical education Report | 69 |

# S. B. K. High School,

## ARUPPUKOTTAI.

CONNEMARA PUBLIC LIBRARY
1 - JUN 1955
MADRAS

# WHAT MAKES A GOOD TEACHER

A GOOD TEACHER NEEDS:—

The education of a college president

The executive ability of a financier

The humility of a deacon

The adaptation of a chameleon

The hope of an optimist

The courage of a hero

The wisdom of a serpent

The gentleness of a dove

The patience of job

The Grace of God, and

The persistence of the devil

— Culled from

"The Syracuse Bulletin"

K. MADHAVA MENON
Minister for Education and Law

FORT ST. GEORGE
MADRAS
D/1st March 1954.

Dear Sri Samuel Durairaj.

I congratulate you and your staff on the idea of publishing the School Annual number this year. It is needless for me to reiterate that the aim of such publications should not only serve the educational needs but also help to mould the character of the young boys and girals who will be the citizens of tomorrow.

Yours sincerely,
(Sd) K Madhava Menon

Sri A. Samuel Durairaj.
Headmaster.
S B. K High School.
Aruppukottai.

# Message from the Divisional Inspector.

I had the pleasure of visiting this school recently and I noticed a number of manuscript magazines. I am glad to hear that a printed Annual is to be published shortly. It is a worthy endeavour of educational value and it will give the pupils a natural joy to find their own work in print. The Magazines generally afford an opportunity for the pupils to develop creative ability and expression and thus the teachers can also find out the latent powers of the pupils. It will also encourage the school spirit besides giving training in literacy and journalistic fields. It is also the best medium to educate the parent - public on the schools' activities and programme.

I wish the endeavour all success.

(P. N. Chamu Nair)
Divisional Inspector of Schools,
Madurai Division.

# Editorial.

CONNEMARA PUBLIC LIBRARY
1 - JUN 1955
MADRAS

So the first number of our School Annual has seen the light of day.

We make no apologies for this magazine Nor do we claim that this is the last word in School Magazines. If this maiden effort of ours were to stimulate further production of class magazines regularly in the next year, this Annual would have more than justified its existance.

While this Magazine is proof of the creative ability of our pupils, it also reveals what could be achieved by the cooperative effort and enthusiasm of pupils themselves. Under the able and stimulating guidance of our masters, pupils can organise several activities themselves. A Dramatic Society, a Radio club, Camera club — all these are grand possibilities in this direction.

We would be failing in our duty if we do not express our thanks to all those who contributed to make this venture a success.

Let us hope this number is only the precursor to many more to come.

CONNEMARA PUBLIC LIBRARY
1 - JUN 1955
MADRAS

# பள்ளி வாழ்த்து.

வித்துவான் சி. சுந்தரராஜன், தமிழாசிரியர்.

செந்தமிழ் மொழியாம் நந்தமிழ் மொழியைப்
பைந்தமிழ்ப் பாவலர் பலரைச் சேர்த்து
மன்றம் நிறுவி மறுவற வளர்த்த
தென்னம் பொருப்பன் விருப்புடன் ஆண்ட
அணிமிகு நாட்டின் ஓர்பா லமைந்த
இருங்கலை கற்ற அருங்கலைச் செல்வர்,
தள்ளா விளையுள், தாழ்விலாச் செல்வர்,
அல்லோர் அனைவரும் அமைதியாய் வாழும்
அணிதிகழ் அருப்புக் கோட்டை என்னும்
சீர்சால் பதியின் செல்வமாய் அமைந்த
நாடார் செய்த நல்வினைப் பயனும்
சைவபானு உயர்நிலைப் பள்ளி, செய்திடும்
போல பல்லாற் றாலும் பல்வகை
வளனும் வாய்க்கப் பெற்றே வாழ்க!
வாழ்க!! வென்றே வாழ்த்திடு வோமே!!!

# THE COMMUNITY and YOU.

... C LIBRARY 1- JUN 1955 MADRAS

**A. SAMUEL DURAIRAJ (Head-master)**

From time immemorial men have written books to describe an imaginary country where the inhabitants are strong and healthy and living peacefully and happily all their lives. Sir. Thomas Browne dreamed visions of a brave new world as early as the 17the century In our century, apart from H G Wells it was Wendel Wilkie who foresaw great possibilities of human happiness and progress in a World Govern-ment. That is the ideal for the realisation of which all good citizens are striving and must strive. When we look at the world to day with its dismal picture of disease, cruelty, war and starvation, we need not be unduly pessimistic we can derive some consolation by realising that in the past years it was much worse. The happier world we live in now has been brought about by men and women who tried to improve the situation of the world around them And in our generation too, there are men who have dedicated their lives in selfless service for the uplift of humanity. Unfortunately it is not everyone who goes about with the ideal of service for others There are a great many individuals in this world who go about as if the world owed them a living, and as if they expected that life would be served up to them on a silver platter This is typically an infantile attitude to life Such a person will not make a good citizen so long as he thinks that the world owes him a living and that

all he has to do, is to marry, look pretty and do nothing Life is not as simple as that. In real life it is much more difficult. In fact sometimes life is most cruel to those whe contribute the most to it but surely, it is never kind to those who contribute nothing.

In every township or village, we all live as a great community under the local administration. For each there is a little world How many of us take a real interest in the life of the community around us? There may be some individuals who profess to take a certain amount of interest in the community in so far as this interest gives them a sense of protection and a possible chance of victory at the next elections. There may be others who are charitable towards the community for no other reason than to buy the esteem of their fellowmen and to come under the lime light. But the average human being takes very little interest in the community around him. This interest ends with the payment of the taxes, for he runs away with the idea that it is the duty of the Government or local administration to see to the welfare and upliftment of the community.

To-day's world is full of the cross currents of selfish human and nationl interests In the face of such a world, one must have a very positive attitude towards service for the community. It would be, no doubt, an easy task for any theorist to prepare a strong indictment of our existing system of community life. It would be still easier to charge that our

Ministers talk too much and do too little, and that the capitalist class is an anachronism in any society. But this criticism alone is not going to transform our society into an ideal state. A positive approach is called for on the part of every citizen. Those who are wealthy must aid those who are poor; those who can see must come to the rescue of those who are blind andthe strong must succour the weak. Surely it is our great fortune that in the world to-day there is such a great avenue for individuals to be of use to one another. For an individual to complain of boredom or to assert that life holds no interest for him, is to confess his poverty of community sense. When one is not interested in the world around oneself, it is an indication that one's investment in life has been too poor and meagre to pay any dividends. But apart from all material considerations, a true citizen derives great happiness in contributing to the welfare of the community in which he lives.

Perhaps some of you will instantly retort by saying that you have not come across such an opportunity to be of service to the community. These members, I should say, are so ambitious that they will not lift a finger for their community unless it be something that calls for a heroic effort At times it may so happen that a great fire, flood or emergency demands a heroic act on the part of some individuals. But community service does not need to be heroic always In every day life, there are countless opportunities for every man and woman to serve the group in which he or she lives

Let us take a few examples. Thoughtless individuals are for ever littering our streets with all forms of trash in our town, simply because both their social and aesthetic sense are not sufficently developed to enable them to realise that their thoughtless disposal of trash makes our town unsightly and unhealthy.

When you see an individual thoughtlessly scattering rubbish all over the streets of the community, it wouldn't do to chide him, but picking up the trash, you can point it out to the man and show him where he can dispose of it with a greater sense of aesthetic values.

Another of the common complaints in our community life is the blaring noise of the neighbour's radio, which at times tends to disturb the mental equilibrium of the inhabitants around. If each radio listener will only think of the other man across the fence instead of only himself, our community life would be far more peaceful and less nerve racking. We have not yet begun to live in soundproof houses yet

Many of us avidly buy books and magazines. which we thoughtlessly destroy after we have finished reading them Or else, such books and magazines are allowed to gather dirt and dust in some hidden corner.

It is the essence of community sense to realise that all books, magazines and newspapers have a great social value, and there are many inpatients in hospitals, or convicts in prisons, or sailors and soldiers in far off outposts to whom the books and periodicals would be the very breath of life. There may be clubs and associations only too eager to replenish their meagre library and reading facilities with your used books and magazines. Every right thinking individual of the community can collect the books he no longer needs and send them to some hospital, orphanage or prison, where they can be used.

It is our thoughtlessness that blinds us to the excess we have in some form or other, which we could very well share with others There may be in the community, many, who crave for the fun of amusement and interest in life but are denied those things by others in the community, who hardly spare a thought for these less fortunates. Community Service presupposes sharing goods, time or services with those who badly need them and there is a joy in such a sharing.

One need not be powerful or rich to be of service to the community "Each man serve according to his gifts" - this shall be the service motto of every man in the community. In whatever profession you are, you can earn the gratitude of those around you by your selfless service. If you are a doctor, you give your service in a clinic; if you are an advocate

give your services to those who have no defender before the law. It is enough to actively engage yourself in simple common deeds Calling on a friend, sending a sprig of flowers to a sick neighbour, making kind enquiries after the welfare of others, giving a pedestrain a lift in your car or cart, these are all simple acts in themselves, but manifest the development of a keen community sense. It is ideal to think of our neighbours everyday and see in what kind and thoughtful ways one could cheer up the drab life around. Don't worry if you are not in the lime light Men who have made the greatest contribution to life, were never heard of.

Conscious of our duty to our community, when we do these little acts, we will find our life richer and fuller, resulting in the creation of an enormous fund of human happiness and goodwill. Here I am reminded of Wordsworth's immortal lines in his poem "TO A CHILD"

"Small service is true servics while in lasts;"
"The Daisy, by the shadow it casts,
Protects the lingering dew drop from the sun"

No service is too small nor too great for our community. Herein lies the essence of community life.

---

**"Money lost, nothing lost;**
**Courage lost, much lost;**
**Honour lost, most lost;**
**Soul lost, all lost"**

# "மூன்று மாத நோட்டீஸ்"

(மு. ராமதாஸ் B. A.)

[நெடுநாட்களாக நிரந்தரமாக (Permanent) ஒரு முதலாளியிடம் ஒருவர் வேலை செய்து வருகின்றார். ஆனால் ஏதோ காரணத்தால் வேலையாளைப் பிடிக்கவில்லை, முதலாளிக்கு. உடனே நீக்கிவிட விரும்புகின்றார். அது இயலாது. சட்டப்படி, தகுந்த காரணங்காட்டி "மூன்று மாத நோட்டீஸ்" முன்னதாகவே கொடுத்துவிட வேண்டும். மூன்று மாதத்திற்குப் பிறகுதான் அவரை விலக்கலாம்.

அந்தப்படியே திருவாளர் **வயிற்றப்பர்** அவர்களை வேலையிலிருந்து நீக்கிவிட விரும்புகின்றார் அதன் தலைவர். அதற்கு அவர் காட்டும் காரணங்களையும் நோட்டீசில் குறிப்பிடும் நிபந்தனைகளையும் பாருங்கள் — ஆசிரியர்]

[நிலைமண்டில ஆசிரியப்பா.]

வயிறே! வயிறே!! வற்றிய வயிறே!!!
உயிரே போயினும் உணர்ந்திடா வயிறே!
முன்னாள் இனிது மூச்சுத் திணற
நன்றாய்த் தின்ற நாளை நினைந்தே
இன்றும் என்னை என்வதைக் கின்றாய்?
உன்னுடன் வாழ்தல் ஒவ்வா தறிவாய்.
ரேஷன் அரிசியின் வாசனை வெறுக்கிறாய்
வேலையைக் குறைவென தூஷணை செய்கிறாய்
வீட்டுச் செலவோ விஷத்தைப் போல
வேகமாய் ஏறிடல் விளங்கிடாய் நீதான்.
ஓட்டலில் சென்று உண்டிட நினைத்தால்

உயிரே போகுது உணர்கிலை நீயே.
சோறு சாப்பிட சொகுசா யமர்ந்தால்
ஆறே அவுன்சில் அடித்த பட்டை
வைக்கிறான் இலையில் வயிற்றை எரியுதே!
பட்டையைப் பார்த்ததும் பசியும் பறக்குதே!
உடைந்த மனதுடன் உண்ணத் தொடங்கினேன்
சாம்பார் சுவையோ வேம்பாய்க் கசக்குது
நெய்யைத் தொட்டால் கையில் ஒட்டுது.
பைய உள்ளே தள்ளப் பார்க்கின்
பல்லை உடைக்கும் கல்லும் இருக்குது.
“தொல்லை” என்றே மெல்லப் புசிக்கின்
நெல்லும் உமியும் நிறைய இருக்குது.
“டப்பாச் சோறு ஒப்பா தென்றே
“அப்பா! பக்ஷணம் அனுப்பிவை” என்றேன்
மசால் வடையில் மாவே இல்லை.
ஆமை வடையோ அரைஉரு வாச்சு.
உப்புமா வைத்திடும் “கப்”போ சிறிது
தோசை மிகவும் லேசாய்ப் போச்சு
பூரியை உதிர்த்தால் ‘புஸ்’ஸெனப் பறக்குது.
கிழங்கு அளித்தால் விழுங்க மறுக்கிறாய்
கோதுமை கொடுத்தால் கோபப் படுகிறாய்
சுண்டல் படைத்தால் கிண்டல் செய்கிறாய்
பயறை ஏற்கப் “பாய்க்காட்” செய்கிறாய்
கப்பைப் புசிக்க வப்புபே சுகிறாய்
இந்தப் படியாய் இருந்திடும் நிலையில்
எந்த மனிதனே ஏற்பான் உந்தனை?
பன்னெடு நாளாய் என்னுடன் பழகியே
“பர்மெனண்ட்டா”கி நீ பணிசெய் வதனால்
மூன்று மாதம் முடிவுறும் நோட்டீஸ்
இன்றே தருகிறேன் ஏற்றுக் கொள்வாய்
என்னுடன் நீயே இருந்திட விரும்பின்

இன்னாள் பஞ்சம் . தன்னை உணர்ந்தே
வாரம் இருநாள் வயிறு நிறையப்
பாரம் ஏற்றி பாக்கியுள் நாளில்
உண்ணு விரதம் உவப்புடன் ஏற்று
ஒன்றும் செய்யா திருந்திடல் வேண்டும்
இல்லையேல் உன்னை எடுத்து எறிந்தே
ஒட்டக வயிற்றினை ஓரிரு ஆண்டு
ஒப்பந் தமதாய் உடனே பேசி
ஒட்டவைத் திடுவேன் உணர்ந்திடு வாயே!

---

(பர்மனெண்ட் - Permanent : நிரந்தரம்.
பாய்க்காட் - Boycott: பகிஷ்கரித்தல்
ஒட்டகவயிறு - ஒட்டகத்தினுடையவயிறு)

---

உழைப்பினால் உரமுற்றவர்களே உலகத்தில் உத்தம வகுப்பினர்.

* * * *

சிறந்த லட்சியங்களுக்காகப் பாடுபடு; மனவுறுதியுடனும் தளராத ஊக்கத்துடனும் கடமையாற்று.

* * * *

சின்னஞ்சிறு செயல்கள் சிறிய விதைகள் போன்றவை; அவைகள் பூங்கொடிகளாக வளரலாம் அல்லது புதர்களாகக் கிளம்பலாம்.

# புறப்புண்ணுணுதல்

அல்லது

# பழந்தமிழ் மக்கள் வீரம்.

மு. முத்துவீரப்பன் B. A., L. T.

[பழந் தமிழ் மக்கள் போற்றி வளர்த்த பண்பாடுகளில் வீரம் காதல் தியாகம் என்பவைகளைச் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும். மற்றெல்லாக் குண மேம்பாடுகளுக்கும் அடிப்படையாக விளங்கும் வீரத்தை நம் மூதாதையர்கள் உயிரினும் மேலாகக் கருதினார்கள். தங்கள் வீர உணர்ச்சிக்கு இழுக்கு ஏற்பட்டால் அவர்கள் தங்கள் உயிரை மாய்த்துக் கொள்ளவும் தயங்கவில்லை. ஒரு வீரன் முதுகில் புண்பட்டால் அவன் போரில் புறங்கொடுத்த கோழை எனப் பொருள் படுவதால், அவ்வீரன் வாள் ஏந்தி தன் ஊருக்கு வட திசை சென்று உண்ணா விரதமிருந்து உயிர் துறந்தான். சிற்சில சமயங்களில் தன் வாளினால் தன் உயிரை மாய்த்துக் கொண்டான். இவ்வழக்கம் "புறப் புண் நாணுதல்" என்றழைக்கப் பட்டது.

இக் கட்டுரை தமிழ் மக்களின் வீர உணர்ச்சிக்குச் சான்றாக இரு சம்பவங்களை விளக்குகின்றது. — (ஆசிரியர்.)

'ஊமையராய்ச் செவிடர்களாய் குருடர்களாய் உலகனைத்தும் இகழ்ச்சி சொல்லப்பான்மை கெட்டு வாழ்கின்றோ'மென்று காலஞ்சென்ற கவி பாரதியார் நெஞ்சம் புழுங்கிப் புலர்புகிறார். அவர் வாக்கியம் வார்த்தைக்கு வார்த்தை உண்மை யென்பது தற்காலத்திய தமிழ் மக்களின் வாழ்க்கையையும் பண்டைத் தமிழ் இலக்கியங்களில் காணப்படும் வரலாறுகளையும் ஒப்பிட்டுப் பார்ப்பவர்களுக்குத தெளிவாக விளங்கும். பண்டைத தமிழ் மக்கள் எவ்வளவு தூரம் தங்கள் வீரத்தைப் போற்றி வந்தார்களென்பதும் அவர்கள் வீர உணர்ச்சிக்குப் பங்கம் ஏற்படக் கூடிய

சம்பவங்களை தங்கள் மரணத்திலும் கொடியதாகக் கருதினார்களென்பதும் பின்வரும் வரலாற்றால் இனிது விளங்கும்.

சுமார் 1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட கரிகால் சோழன், வெண்ணிப் பறந்தலையென்னும் இடத்தில் சேர நாட்டரசனுடன் பொருது வெற்றி கொண்டான், அவ்வமயம் நடந்த போரில் சேர அரசனுக்கு முதுகில் ஒரு காயம் ஏற்பட்டது. முதுகில் காயம் ஏற்படுவது சிறந்த வீரர்களுக்கு இழுக்கு என்ற உணர்ச்சி ததும்பிய அக்காலத்து வழக்கப்படி அவன் தன் உயிரை மாய்த்துக் கொள்ள விரும்புகிறான். அவ்வாறே தற்கொலை செய்து கொள்கிறான். இவ்வரலாறு 'புறநானூறு' என்ற சங்க நூலில் 66-ம் செய்யுளில் விவரிக்கப்படுகிறது. அச்செய்யுள் பின்வருமாறு:—

'நளியிரு முந் நீர் நாவா யோட்டி
வளி தொழி லாண்ட வுர வோன் மருக'
களியியல் யானைக் கரிகால் வளவ,
சென்றமர் கடந்த நின்னாற்ற றோன்ற,
கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை
மிகப் புகழுலக மெய்திப்
புறப் புண்ணாணி வடக்கிருந் தோனே!

'கடலில் காற்றை ஏவல் கொண்ட சோழ பரம்பரையைச் சேர்ந்த கரிகால் வளவனே! வெண்ணியென்னுமிடத்தில் உன்னுடன் பொருது, உலகத்தில் தன் புகழ் என்றென்றும் நிலைத்திருக்குமாறுதான் அடைந்த புறப் புண்ணிற்காக நாணி தன் உயிர் துறந்த சேரலாதன், உன்னினும் சிறந்தவனன்றோ, என கவி சேரலாதனைப் புகழ்கிறார். இரு பெரும் அரசர்கள் போரிடும் பொழுது ஒருவர் வெற்றியுறுவதும் மற்றவர் தோல்வியுறுவதும் சர்வசாதாரணம். ஆனால் தோல்வியடைந்த வேந்தன் 'மயிர் நீப்பின் வாழாக் கவரி மானன்ன' தன் வீரத்திற்குப் பங்கம் ஏற்பட்டதால் தானே தன் உயிரை மாய்த்துக் கொள்வது, போரில் அடையும் வெற்றியை விடச் சிறந்தது என்பது கவிஞர் கருத்து.

இச் செய்யுளில் இன்னொரு விசேஷம் என்னவென்றால், இதைப் பாடியவர் வெண்ணிக் குயத்தியார் என்னும் ஒரு பெண் புலவர். நம் மூதாதையர்களின் வீர உணர்ச்சிக்கும், அவர்களில் ஆண் மக்களைப் போலவே பெண்பாலரும் வீரத்திலும், கல்வியிலும் மேம்பட்டிருந்தனர் என்று எண்ணுந்தொறும் நம்முள் கழி பேருவகை ஊட்டும் உணர்ச்சிக்கும் இச்செய்யுள் ஒரு சிறந்த சான்றாகும்.

'புறப்புண் நாணுதல்' என்னும் பழந்தமிழ் மக்களின் தனிப் பெரும் மாண்பைக் கவியரசர் கம்பரும் தம் காவியத்தில் பல இடங்களில் அழகாக வர்ணித்திருப்பது பன்முறை படித்து இன்புற வேண்டிய விஷயங்களில் ஒன்று. கம்ப இராமாயணத்தில் கடை நாட்போரில் இராமனுடைய அம்பினால் இராவணன் உயிர் துறந்து கீழே விழுந்து கிடக்கிறான். அவன் போர்வன்மையை நேரில் கண்ணுற்ற இராமன் அவனைத் தன் பரிவாரங்களுடன் வந்து பார்க்கிறான். தன்னுடன் பொருது வீழ்ந்த இராவணனின் சிறந்த வீரத்தை இராமன் மனமுவந்து போற்றுவதைக் கவிஞர் பிரான்,

'போரிடை மீண்டொரு வருக்கும்
புறங்கொடாப் போர் வீரன் பொருது வீழ்ந்த
சீரினையே மனம் உவப்ப, உருமுழுதும்
திருவாளன் தெரியக் கண்டான்'

எனக் குறிப்பிடுகிறார். இவ்வாறு இராவணனுடைய மேனி முழுவதையும் பார்த்துக்கொண்டிருக்கும் போதே, இராமனுடைய ஆச்சரியம் வெட்கமாக மாறுகிறதாம். ஏனென்றால் இராமன், இராவணன் முதுகிலும் ஒரு பழய தழும்பைப் பார்த்துவிட்டானாம். இந்தத் தழும்பையும், இதைப் பார்த்த இராமன் முகம் சுளித்ததையும், கவனித்த விபீஷணன், தன் அண்ணனின் வீரத்திற்கு எள்ளளவுகூட இழுக்கு ஏற்படக் கூடாதென்பதற்காக அத்தழும்பு ஏற்பட்ட விதத்தை வெளியிடுகிறான். இராவணன் ஒரு காலத்தில் யானைகளுடன் போரிட்டானாம். அப்பொழுது அவைகளின் தந்தங்கள் இராவணன் மார்பிலே குத்தி முதுகின் வழியாக

வெளிப்பட்டு முறிந்து போயினவாம். ஆகவே அந்த முதுகுத் தழும்புகள், புறப் புண்ணல்ல, விழுப் புண் அல்லது வெற்றித் தழும்புதான் என்கிறான் வீபீஷணன்.

"நாடுளதனையும் ஓடி நண்ணலார் காண்கிலாமல்,
பீடுளகுன்றம் போலும் பொருந்திசை எல்லையானைக்
கோடுளதனையும் புக்குக் கொடும் புறந்து அழுந்து
புண்ணின்
பாடுளதன்றித் தெவ்வர் படைக்கலம் பட்டு என் செய்யும்"

என்று, தம்பி, தமயனின் வீரத்தைப் பாராட்டுகிறான். குன்று போன்ற ஓர் யானையுடன் இராவணன் போரிடும் பொழுது அதன் தந்தம் இவன் நெஞ்சில் பாய்ந்து முதுகின் வழியாக வெளிப் பட்டதினால் ஏற்பட்ட தழும்பைத் தவிர வேறு தழும்பு அல்ல என்று இராமனின் சந்தேகத்தை நிவர்த்திக்கிறான். பழந்தமிழ் மக்களின் பலகுண மேம்பாடுகளைப் பாராட்டியிருப்பது போலவே, கம்பர் இவ்விடத்தில் அவர்களின் வீரத்தையும் குறித் திருப்பது பன்முறை படித்து இன்புற வேண்டிய விஷயங்களிலொன்று.

---

உன்னால் செய்யக்கூடிய நன்மைகளெல்லாம் செய்; அதை எக்காலத்திலும் எல்லா இடங்களிலும் எல்லா வகைகளாலும் செய்.

*　　*　　*

நாட்டுப் பற்றுமட்டும் போதாது; ஒருவரிடமும் வெறுப்போ மனக்கசப்போ கொள்ளக்கூடாது.

*　　*　　*

இழிவான முறையில் இலாபம் தேடுவதை விட நேர்மையான வழியில் இழப்பது மேல்.

# புரளுது பாரீர்!

வித்துவான் சி. சுந்தரராசன், தமிழாசிரியர்.

பாரினிற் சிறந்தது பைந்தமிழ் நாடு
பல்வகை நோக்கம் கொண்டநந் நாடு
பற்பல வளங்களில் சிறந்தபொன் நாடு
பசுமை குன்றாத பைந்தமிழ் நாடு
மலைவளம் மிகுந்ததும் நந்தமிழ் நாடு
மக்கள் மகிழ்வுடன் வாழ்ந்தநந் நாடு
கண்ணகி முதலாக் கற்புடைப் பெண்டிர்
பொற்பொடு வாழ்ந்ததும் நந்தமிழ் நாடே.
தமிழ்மறை யென்றும் பொதுமறை யென்றும்
தமிழரும் பிறரும் போற்றத் தக்க
திருக்குற ளியற்றிய பொய்யில் புலவர்
வள்ளுவர் வாழ்ந்ததும் நந்தமிழ் நாடு
மணிமே கலையை மகிழ்வுட னளித்த
மாத்தமிழ்ப் புலவர் எத்தும் சாத்தனார்
மகிழ்வுற வாழ்ந்ததும் நந்தமிழ் நாடு
பாவல ரல்லாக் காவலர் தாமும்
காவியம் புனையும் கவின்பெறு நாடு
சீர்மிகும் சிலம்பைச் சிறப்புட னளித்த
இளங்கோ வாழ்ந்ததும் இன்தமிழ் நாடு
தருக்கி யிருந்த வடவர் செருக்கை
முறுக்குடன் சென்று முறித்து மீண்ட
அழகின மறுபெயர்க் குட்டுவ னென்னும்
திண்மைசால் வேந்தன் வாழ்ந்தநந் நாடு
பைந்தமிழ்ப் புலவரைப் பரிவுடன் பேணிய
பாரி என்னும் செல்வன் அன்ன
பல்லோர் வாழ்ந்ததும் நந்தமிழ் நாடு
பழைமைகள் புகுந்ததால் விளைந்தது கேடு
நலிந்தனர் மக்கள் நாயைப் போல
நலிந்த மக்களை நல்வழிப் படுத்த
போக்குவோம் புன்மையை விரைவினில் கூடு!
பலரும் போற்றிய பழைமை உலகம்
புதுமைப் புயலால் புரளுது பாரீர்!

# Our Budding Authors

## Reward for ............ ?

S. K Ramachandran VI A.

One day Form VI A was very noisy. There was a great uproar. The Headmaster's room, being adjacent to VI A, the Headmaster was very much annoyed by the noise. He was a very wise man and regulated the boys often by his great knowledge of psychology. So, that day also, he left his room for VI A and all the noise subsided on his arrival and the boys saluted him.

He signalled to a boy for a chalk and Chockan ran out to fetch it. As soon as he returned, the Headmaster wrote on the board the following words :-

"Good boys! I am going to offer a nice reward at the end of the year for the boy who behaves differently from others."

So writing, he went away This affected the boys' behaviour very much Each boy, wishing to win the prize, thought of some thing that could make him different from others. No wonder, even dufters finished their home tasks every - day. Some pupils approached the Head-master, a number of times a day on some pretext or other, and the Head-master was not without noting it.

Then came the day for the award The Head-master, that day, entered the class with a small package. As he sat on his chair, each boy expected the prize for himself. What a disappointment! The Head-master gave the prize to a boy, called Nayagam, who was always silent and spoke little, and whom the boys regarded as unfit for the prize awarded by the Head-master. There was great disappointment, among others, for the prize was a fine wrist watch costing hundred rupees!

Then the Head-master smiled and explained. "I have given the prize to him, dear boys, because he is always silent, and silence, you know is golden," he said.

From that day not a mouse stirred in VI. Form A.

---

**No race can prosper till it learns that there is as much dignity in tilling the field as in writing a poem.**

* * * * *

**Only the actions of the just smell sweet and blossom iu their dust.**



On a Spree to Ettayapuram.



Pinnal - Kollattam



Sun-rise at Cape Comorin



Sun-set at Cape Comorin.

# VANA MAHOTSAVA.

**M. Sundaram Form VI B.**

Our Food-Minister Mr. K. M. Munshi asked the people to celebrate Vana Mahotsava in the first week of July 1950. He said that we would get many benefits if we celebrated Vana Mahotsava. So all the people in our country celebrated it.

We celebrated Vana Mahotsava on Friday the 7th July in our school. Three or four days before the celebration we prepared for it. We dug pits on plots assigned to us by our teachers. We put manure in the pits. Our teachers procured saplings from the Agricultural Department.

On the celebration day, all the pupils and teachers assembled in the school ground at 9 a. m. After prayer, we had the flag-hoisting ceremony. The National tri-colour flag was hoisted by the head-master. All of us saluted the flag in the most reverential manner. The girls performed kummi and kolatam.

Then the head-master delivered a short speech. He briefly explained the importance of the celebration and the order of events that would follow. He announced a prize for the best tree at the end of the year.

The Head master accompanied by the teachers and class leaders went to the allotted place and planted the first sapling, The classes marched to their places and stood there while the teachers planted the saplings. The girls sang while the plantation was going on.

After the plantation ceremony we took great trouble to put up fences round the pits We are watering the pits regularly. We hope that our trees will grow well.

# Just before the Examination.

By Ruby Samuel VI. B.

The examination was drawing near. I began to prepare feverishly fòr the examination. Usually I worked till 11 p m. and again woke up at 3 a m. to revise my lessons.

One day my younger brother whom I liked most, taunted me that I could not keep awake one full night. I retorted that I could. He challenged me to do it.

The next night came. I was detemined to sit

awake through the night. So I requested my mother to prepare a pot of tea for me and she did so. The book lay open before me. I read for some time. Sleep tried to woo me. Remembering my brother, I tried to shake off the sleepiness. I drank some tea and bathed my eyes in cold water. Again I studied for some time But it was of no use. Then I Paced the corridor for some time and drank two more cups of tea. Still my eyes refused to look at my book. The eye lids became very heavy and began to spread over the eye-balls My instinct struggled to lift the eye lids. A great struggle arose between the instinct and the eye lids. In the end the latter must have won the struggle and I must have fallen asleep near the lamp and on the table resting my head on the open book.

What I knew next, was the sun's rays warming my face through the eastern window. I sprang up guiltily and hurried to the bath room. On my way I encountered all members of my house mischievously smiling at me and then breaking into violent laughter. I did not understand. I never thought that they were laughing at me. I asked them to share the joke with me. At once my younger brother ran to his room to fetch a mirror. He lifted the mirror to my face. What I saw, horrified me! My face had been picked up with paint, ink, lampblack and what not! Some one had wasted his artistic talents on my sweet face I instinchively knew who.

TATA PUBLIC LIBRARY
MADRAS



# நினைவுதான் கனவு

A. தங்கச்சாமி VI. A.

என்னைப் பெரும் வியாதி ஒன்று தொத்திக்கொண்டது. அதை அவ்வளவு முத்த விட்டதற்குக் காரணம் என்னுடைய அஜாக்கிரதையே என்று திட்டமாகக் கூறுவேன். என்னுடைய மனைவி மிகவும் பிடிவாதக்காரி. என்னுடைய வியாதி அவ்வளவு முத்தியதற்குக் காரணம் அவளேதான். நான் முன்பே டாக்டரிடம் பார்த்திருந்தால் என்னுடைய வியாதி முன்பே போயிருக்கும். ஆனல் என்னுடைய மனைவி நாட்டு வைத்தியம் என்று அங்கும் இங்கும் எதை எதையோ வாங்கிக்கொடுத்து விட்டாள். அதனல் பணச் செலவுதான் மிச்சம். என் வீட்டுக்காரி வேண்டாத சாமியில்லை; கும்பிடாத கோயிலில்லை. கடைசியாக அவளை லட்சியம் பண்ணுமல் டாக்டரிடம் தான் பார்ப்பேன் என்று சொல்லிப் பட்டணம் வந்துவிட்டேன். ஒரு மாதத்தில் பூரண குணமடைந்து திரும்பி வந்தேன். இதனல் என் மனைவி ஆச்சரியம் ஒன்றும்பட்டதாகத் தெரியவில்லை. காரணம் என்னை மகாலிங்கத்திற்கனுப்பி, சேவல் பலியிடுவதாக வேண்டிக்கொண்டாளாம். அதன் பயனே நான் பூரண குணமடைந்து வந்திருப்பதாகக் கூறினுள். நான் எவ்வளவோ மறுத்தும் அவளது வார்த்தையை எதிர்த்துப் பேச முடியாத நிலைமையில் செல்வதாக ஒப்புக்கொண்டேன்.

நாளை காலையில் நான் செல்லவேண்டிய தினம் இரவே, என் மனைவி சோற்று மூட்டை, பணம் எல்லாவற்றிற்கும் ஏற்பாடு செய்து விட்டாள். கோழிக் கூண்டில் இரவே சேவலையும் பிடித்துக் கட்டிவிட்டாள். நான் நாளைச் செல்ல வேண்டிய என்

பிரயாணத்தைப் பற்றி நினைத்துக் கொண்டே படுத்து இருந்தவன் என்னை அறியாமலே தூங்கி விட்டேன். நான் பிரயாணம் செய்து கொண்டே இருந்தேன். என் ஊரில் மோட்டார் கார் இல்லாததினால், பட்டணம் வரைக்கும் நடந்து செல்லலாமென்று நடந்து கொண்டிருந்தேன். இடையிலே பசி எடுத்ததனால், பணப் பையைப் பத்திரப்படுத்திக் கொண்டு, சாப்பிட உட்கார்ந்தேன். கோழிச் சப்தம் கேட்கவே, மூட்டையை அவிழ்த்துப் பார்த்தேன். என்னே ஆச்சரியம்! சேவலுக்குப் பதிலாகக் கோழி இருந்தது. அப்பொழுது எனக்கு ஞாபகம் வந்தது, இரவு என் மனைவி அவசரத்தில் சேவலுக்குப் பதிலாகக் கோழியைத் தெரியாமல் பிடித்துக் கட்டியிருக்கிருள். கோழியைப் பார்த்தாலும், எங்களது போல் இல்லை. எங்களுடைய பேசாத வீட்டுக் காரருடைய கோழியாக இருந்தது. கோழி, கூடு தெரியாமல் மாறி வந்து எங்கள் வீட்டில் அடைந்து இருக்கிறது. சாமி காரியத்தில் இதெல்லாம் பார்க்கக்கூடாது என்று பின்பு மனம் தேறினேன். இருந்தாலும் சாமிக்குப் பலியிட சேவல் அல்லவா வேண்டும், இது கோழியாக இருக்கிறதே என்று மனம் கலங்கியது. பின்பு மனம் தேறி; சாமிக்கு வேண்டியது பலி தானே; கோழியானல் என்ன, சேவல் ஆனல் என்ன, என்று கோழியையே மனம் கசியாமல் கொண்டு சென்றேன். நடந்ததே தெரியாமல் பட்டணம் வந்து சேர்ந்தேன். மோட்டாருக்கு டிக்கட் கேட்டேன். பொட்டணத்தில் என்ன என்று கேட்டான். சோற்று மூட்டையும் கோழியும் என்று சொன்னேன். கோழியை ஏற்ற முடியாது என்று கூறினன். சாமி காரியம், நீங்கள் மனசு வைக்க வேணும் என்று கெஞ்சினேன். சாமிக்குத்தான் கோழி கொண்டு போறீயோ; இதெல்லாம் ஏற்ற முடியாது என்று கண்டிப்பாகக் கூறினன். நானும் எவ்வளவோ மன்றுடினேன். அவன் இணங்கியதாகத் தெரியவில்லை. பின்பு அவ்விடத்தை விட்டு, நகர்ந்து உட்கார்ந்து யோசித்தேன். எனக்குத் தர்ம சங்கடமாய்ப் போய் விட்டது. என் மனைவி மீது கோபம் வந்தது. பின்பு ஒரு முடிவுக்கு வந்தேன்.

சோற்றைக் கீழே கொட்டினேன். அதனுள் கோழியை வைத்துக் கொண்டேன். பின்பு வந்து டிக்கட் கேட்டேன், இவ் வூரில் தெரிந்த வீட்டில் கொடுத்து விட்டேன். என்று, கட்டிய சோற்று மூட்டையை மட்டும் காண்பித்தேன். டிக்கட் வாங்கிக் கொண்டு காரில் ஏறிக்கொண்டேன்.

கார் புறப்பட்டது. எனக்குக் கோழியின் ஞாபகத்தால் மனது திக், திக் என்றது, கோழி மெதுவாக சப்தம் போட ஆரம்பித்தது. எனக்குப் பகீர் என்றது. மேலும் எனக்கு அதிக மாகப் பதட்டம் எடுக்க ஆரம்பித்தது. எல்லோரும் என்னைக் கவனிப்பது போல் எனக்கு இருந்தது. பின் கோழியின் சப்தம் கொஞ்சம், கொஞ்சம் அதிகமாகவே; அதன் கழுத்தைப் பிடித்துக் கொண்டேன். பின்பு சப்தமே கேட்கவில்லை ஆனல் இதை யாரும் கவனித்திருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன்; ஆனல் எப்படியோ;

ஊர் போய்ச் சேர்ந்து விட்டேன். அப்போழுதுதான் என் மனம் நிம்மதியாக இருந்தது. தனிமையாக ஓரிடத்தில் போய் உட்கார்ந்து இளைப்பாறினேன். பினபு கோழியை எடுப்பதற்கு மூட்டையை அவிழ்த்தேன். என்னே ஆச்சரியம் கோழி இறந்து இருந்தது. கழுத்தைப் பிடித்தால் சும்மாவா இருக்கும். எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை இறந்த கோழியைத் தூக்கி எறிந்து விட்டேன். இந்த நேரமெல்லாம் அடிக்கடி என் மனைவி ஞாபகம் தான் வந்தது. பசி அதிகம் இருந்ததனல் பணம் எடுக்கப் பையைப் பார்த்தேன். பையைக் காணும். பை கத்தரித்து எடுக்கப்பட்டிருக்கிறது. எனக்கு மூளையே குழம்பிப்போய் இருந்தது. பைத்தியம் பிடித்துவிடும் போல் இருந்தது. இவை எல்லாவற்றிற்கும் காரணமான என் மனைவியின் மீது அளவுகடந்த கோபம் வந்தது. அவள் என் பக்கத்தில் இருந்தால் தெரியும் என் புத்தியே ஒரு நிலையில் இல்லை. பசி வேறு காதை அடைத்தது. ஆங்காரம் ஒரு பக்கம் இருந்தது. என்னையறியாமல் கோவென்று அலறிவிட்டேன். யாரிடம் சென்று என் பசியைத் தீர்ப்பது;

பணம் இல்லையே; யாசகம் கேட்டாலும் என்னுடைய அலங்காரத்தைப் பார்த்து எவன் கொடுப்பான். எனக்குத்தான் கேட்க வருமா? அப்பொழுது நான் மகாலிங்க அப்பனைத் திட்டாத நேரமில்லை. உன்னிடம் வந்ததிற்கு இதுதானே பலன் என்று நானே சொல்லிக்கொண்டேன். மகாலிங்கத்திற்குப் பலியிட வந்த என்னைப் பசியே பலியாக்கி விடும்போல் இருந்தது.

இந்த நேரத்தில் என் மனைவி எழுந்திருங்கோ என்று தட்டி எழுப்பினாள். திடுக்கிட்டு எழுந்திருந்தேன். நல்ல வேளை; இந்த ஆபத்தான நேரத்திலாவது வந்து எழுப்பினாளே என்று அவள்மேல் இருந்த கோபத்தையெல்லாம் மறந்து விட்டேன். அப்பொழுது தான் எனக்கு ஞாபகம் வந்தது. நினைவுதான் கனவு என்ற உண்மை என் விஷயத்தில் மெய்யாகிவிட்டது. இரவு படுக்கும்பொழுது என் பிரயாணத்தைப் பற்றி நினைத்துக் கொண்டே படுத்திருந்தேன் அல்லவா? அவை தான் அதற்குக் காரணம். கனவை என் மனைவியிடம் கூறினேன். அவள் ஆச்சரியப்பட்டு உங்களைப் போக வேண்டாம் என்று சொல்வதற்குத்தான் எழுப்பினேன் என்று கூறினாள். அவள் போகச் சொன்னாலும், இப்பொழுது போகவே மாட்டேன் என்பதை அவள் அறியவில்லை போலிருக்கிறது. என் மனைவியின் இந்த மாறுதலுக்குக் காரணம் எனக்குத் தெரியவில்லை ஒரு வேளை என்னைப் போல் கனவுதான் கண்டாளோ எனக்குத் தெரியாது. இப்பொழுது இருவர் மனமும் ஒன்றாய் விட்டது. அவளது இந்த மாறுதலைப் பற்றிக் கேட்கவும் நான் பிரியப்படவில்லை.

---

*தன் அறிவின் ஆழத்தையும், அறியாமையின் அளவின்மையையும் அறிவதே உண்மை ஞானம்.*

*   *   *   *

*கேடில் விழுச் செல்வம் கல்வி*

# தமிழன்னையின் ஆணை

வீ ஜனகராஜன். VI Form B

ஒள்ளிய நிலவினிலே ஓடைக்கரைதனிலே,
வெள்ளியகல் லின்மேலே வீற்றிருந்தே னப்போது,
அன்புக னிந்தமுகம் அருள்செறி யும்பார்வை,
துன்பத்தின் காரணமாய்த் துயர்மிகுந்த தோற்றம்,
கொண்டவொரு கன்னி 'குழந்தா'யென் றெனையழைக்க;
விண்டவென் சிந்தனையை வீசியெ றிந்துவிட்டு
ஒன்றுந்தோன் றாதவனாய் ஊகம் செய்யாதவனாய்
நின்றிருந்தே னப்போது நெகிழ்வுடனவ் வம்மையுமே
"குழந்தாய்நான் தண்டமிழ்த்தாய் கூறுவதைக் கே" ளென்றாள்,
"விழைகின்றேன் தாயேநீ விம்மும்கா ரணமறிய"
என்றேனா னாவலுடன் இருகரங்க ளுங்குவித்து,
அன்னையுமே யப்போது அதரங்க ளைத்திறந்து,
"மகனேநம் தமிழ்நாட்டில் மாண்புடனான் வாழ்ந்ததுபோய்
இகழ்வுடனே யெனைவிட்டு ஏத்துகின்றார் பிறமொழியை,
தமிழ்மகனே யுன்னால் நான் தழைத்தோங்கும் வழிகள்தனை
குமரிமுதல் வேங்கடமாம் குன்றுவரை யுறைதமிழர்
அனைவருமே யன்புமிக ஆவலுடன் அறியும்வகை
முனைந்துசெய லுன்னாலே முடியுமெனக் கூறவந்தேன்.
அறிவாய்நான் செல்வே"னென் றறைந்தவளும் மறைந்தாளே
அறிவீர் தமிழரேயவ் வாணையையும் முடிப்பீரே.

# தமிழ்ப் பெருமை.

ச. அண்ணாமலை
நான்காம் படிவம் ஆ. பிரிவு

"தமிழ்ப் பெருமை" என்னும் தலைப்பின் கீழ், இதுவரையில் காணப்பட்ட கட்டுரைகள் கணக்கிலடங்கா; எழுதப்பட்டவை எட்டிலடங்கா; அங்ஙனமிருக்கத் "தமிழ்ப் பெருமை" யைப் பற்றி நான் எழுதுவதன் நோக்கம், நான் கேட்டவைகளையும், படித்தவை களையும் என் நினைவுக்குக் கொண்டு வந்து மகிழ்வதற்கேயாகும். பல்லாயிர ஆண்டுகளாகவே நம் இந்தியாவில் வடக்கே வேங்கட மலை முதல் தெற்கே கன்னியா குமரி முனை வரையிலும் வாழ்ந்து வந்த மக்கள் தமிழ் என்னும் தனிப் பெரு மொழியைப் பேசியும், புகழ்ந்தும் வந்தனர். எனவே அவ் வெல்லைக்கு உட்பட்ட நாமும் தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கூறிக்கொள்ளுவதற்கு உரிமையுடையோராவோம். ஆகையினால் நமக்குத் தாய் மொழி யாக அமைந்த தமிழை நாமும் போற்றிப் புகழுவதற்கு உரிமை யுடையவர்களாக இருக்கின்றோம்.

தமிழ் என்ற சொல்லுக்கு இனிமை என்பது பொருளாகும் இத்தமிழ் மொழி சொற் பெருக்கு, அணியழகு, ஒலி இனிமை, வரி அழகு, தெய்வத் தன்மை ஆகியன வாய்ந்தது என்பதும் வீர உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பும் சக்தி பெற்றது என்பதும் ஆய்ந் தமைந்த கேள்வி அறிவுடையோரது துணிவாகும். மொழியா ராய்ச்சியில் வல்லுநரான கால்டுவெல் துரை போன்ற பெரிய அறிஞர்களும் தமிழ் மொழியின் ஒலிவடிவம், வரி வடிவம் முதலிய சிறப்பியல்களைப் படிப்படியாகப் பாராட்டியிருக்கிறார்கள்.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த மொழியைக் கசடறக் கற்ற புலவர்கள் கூறும் வசை மொழிகளையும் வள்ளல்கள் பொறுத்தனர் என்பதும் இதன் சிறப்பை மேலும் உயர்த்தும்.

மற்றைய மொழிகளில் வரையறுத்துத் தெளிவுறுத்திச் சொல்லப்படாத பொருளிலக்கணம் என்ற பகுதி யொன்று தமிழ் மொழியில் சிறப்பாக அமைந்திருக்கிறது.

"கண்ணுதல் பெருங்கடவுளும் கழகமோடமர்ந்து
பண்ணுறத் தெரிந்தாய்ந்த இப்பசுந் தமிழ் ஏனை
மண்ணிடைச்சில இலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணிடைப்படக் கிடந்ததா எண்ணவும் படுமோ"

என்று ஒரு தமிழ்ப் புலவர் பாராட்டியது இங்கு என் நினைவுக்கு வருகிறது.

பண்டைத் தமிழ் நூல்களில் இயற்கையழகின் வருணனை அதிகம். தன்மை நவிற்சியணியே எங்கும் காணப்படுகிறது. கற்பனை பெரும் பாலும் இல்லை யென்றே சொல்லவேண்டும்,

இவ்வாறன தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட தமிழர்கள் வாழ்ந்த நாடு எங்ஙனமிருந்தது என்பது தமிழுக்குப் பெரும் தொண்டு செய்து வருகின்ற திரு.வி. கலியாண சுந்தர முதலியார் அவர்களது பின் வரும் செய்யுளால் நன்கு விளங்குகிறது:—

'யாதும் ஊர் யாவருங்கேளிர்' என்றுணர்ந்த நாடு
'எவ்வுயிர்க்கும் அன்பு செய்ய' என்றிசைத்த நாடு
'ஒது குலந்தெய்வமொன்றே' என்று கொண்ட நாடு
'ஒக்கு முயிர் பிறப்பென்னும்' ஒருமை கண்ட நாடு
'நாதன் அன்பு நீதி இன்பு நட்' பென்ற நாடு
'நாமார்க்குங் குடியல்லோம்' என்றிருந்த நாடு
'தீதில்லா மொழி' வளர்க்கத் தெளிவபெற்ற நாடு
'செந்தண்மை' விருந்தளிக்குந் தெய்வத் தமிழ் நாடே

நம் பண்டைத் தமிழர்கள் எகிப்து, கிரேக்க நாட்டுடன் பெரும் வாணிபம் செய்து வந்தனர் என்று நாம் சரித்திர வாயிலாக அறிகின்றோம். போர்க்களத்தில் புறமுதுகு காட்டி

ஓட மாட்டான் தமிழன் என்பது, பரம்பரைத் தமிழர்களைப்பற்றிப் பெருமைப் படும்படியான நிகழ்ச்சி. தன் மகன் போர்க்களத்தில் பின் வாங்கி இறந்தான் என்று சொல்லக்கேட்டு 'ஆ! அப்படியா! அத்தகைய பேடிக்குப் பால் வார்த்த என் மார்பை இதோ அரிந்து எறிகின்றேன்! என்று சொல்லி வாளேந்திப் போர் முனை நாடிச் சென்ற வீரப் பெண்களின் வரலாறு இங்கு நினைவுக்கு வருகிறது

G U. போப்புப் பெரியார் "தென்னிந்தியர் எந்நாட்டாரினும் நல்லொழுக்கத்திற் சிறந்து முன்னணியில் நிற்பதற்குரியவர். அதற்குக் காரணம் 'நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி' என்னும் பழமொழியால் அமைந்த நாலடியாரும் 'திருக்குறளுமே' என்று கூறிப் புகழ்ந்துள்ளார். இதனால்தான் 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்று பாரதியாரும் பாடியிருக்கிறார். இம் மொழியில் அமைந்த பாடல்கள் வன்னெஞ்சுடையாரையும் கரைந்துருகச் செய்யும் என்பது உண்மை. இத்தகைய தன்மை வாய்ந்த மொழியினை அன்னியரான பேரறிஞர்கள் புகழ்ந்த பொன்னுரைகளை எழுதினால் ஏட்டிலடங்கா. இத்தகைய தமிழைப் பாரதியார்

'செந்தமிழ் நாடென்னும் போதினிலே—இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே —எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே —ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே'

என்று புகழ்ந்து பாடியிருக்கிறார்.

இவ்வாறாக, வாழ்க்கை, ஒழுக்கம், நீதி இவற்றைப் போதிக்கும் தனிப்பெருந்தன்மைவாய்ந்த நம் தமிழ் மொழியை நம் தமிழ் நாட்டில் வாழ்கின்ற மக்களனைவரும் கருத்தூன்றிக் கற்று, நம் பண்டையத் தமிழர்களின் வாழ்க்கையை ஒட்டி நடப்போமாக.

# அடக்கம்.

எஸ். கே. ராமச்சந்திரன் VI. A.

---

அஞ்சிப் புகலவேண்டா நெஞ்சம் பதறவேண்டா
பிஞ்சுடல் சோருதலும் வேண்டாமே — எஞ்சாதே
நற்கருமம் நன்றே முடிந்திடலாம் நன்னாவைக்
கற்றா லடக்கி விட.

பின்னுறுவ முன்னறிந்து போற்றி நடந்துகொள்ளும்
நுண்ணறிவு நீளரவம் கத்தாதே — கண்ணுறுவாய்
தீட்டாத புத்தியால் சத்தமிட்டுத் தேரைதான்
காட்டிக் கொடுத்திடுத லால்.

அறியாத போது முறியாதே மௌனம்
பொறிவென்ற மேலோன் எனவும் — செறிந்த
மதியுளோன் என்றும் மருளுளோன் என்றும்
உதிர்ப்பினும் மோனமே நன்று.

உள்ளுவ எல்லாம் உறுத்துமுள் ளேயாங்கு
கிள்ளி எடுத்திடலாம் அஃதைமன் — விள்ளியதைப்
போக்கிடு மோஒருவன் இல்லையால் சொல்லாதே
நோக்காத போதி லொரு சொல்.

பேசாதே பேசுங்கால் எண்ணிடுவாம் பன்முறையே
மாசேயு ருதக்கால் மேலுங்கேள் — மாசற்றோய்
புப்புசத்தின் வன்மை குறைக்கும்பேச் சாமெனவே
வெப்புடல்சேரா ராதுமோனத் தால்.

---

# உல்லாசப் பிரயாணம்

## (திருவனந்தபுரம் செலவு)

[எஸ். எல்லப்பன்]

1950-ஆம் வருடம் நவம்பர் மாதம் 6ந்தேதி காலையில் 6-30 மணிக்கு நாங்கள், சைவ பானு க்ஷத்திரிய உயர்தர வித்தியாசாலை மாணவர்கள் 64 பேர் மூன்று ஆசிரியர்களுடன் திருவனந்தபுரம் உல்லாசப் பிரயாணம் கிளம்பினோம். தொகுதி தொகுதிகளாக காரில் விருதுநகரை அடைந்தோம் நாங்கள். ஆனால் அந்தப் பொல்லாத திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் எங்களை ஏமாற்றி விட்டுச் சிறிது காலம் தாமதித்து வந்தது. வண்டி வந்ததுதான், நாங்கள் எல்லோரும் விழுந்தடித்து ஓடி ஒரு வண்டியில் ஏறினோம், ஆசிரியர்கள் ஒழுங்காகப் போய் வண்டியில் ஏறும்படி சொல்லியதை யெல்லாம் எல்லோரும் மறந்து.

நாங்கள் ஜன்னல் அருகிலிருந்து கொண்டு வெளியிலுள்ள கூட்டத்தை எங்கள் வண்டியில் ஏற விடாதபடி "இது எங்கள் வண்டி இதில்இடமில்லை போ" என்று கூறினோம். வண்டிபுறப்பட்டவுடன் ஆரம்பித்தது எங்கள் ஆரவாரம். வெளியி லிருப்பவர்களைப் பார்த்துப் "போய் விட்டு வருகிறோம்" என்று கூறி பிரமிக்கச் செய்தோம்.

மாணவர்களாகிய நாங்கள் திகைக்கும்படி வழியில் ரயிலில் நடந்தது ஒரு சம்பவம். அன்னியர்களை வண்டியில் நுழைய விடவில்லை நாங்கள். ஆனால் திடீரென்று வண்டி ராஜபாளையத்தை அடுத்து வரும்பொழுது 'மிக்சர் மிக்சர்' என்று சப்தம் கேட்டது எங்கள் வண்டியினுள். நாங்கள் மிக்சர் விற்பவனைக் கழுத்தைப் பிடித்து வெளியில் தள்ள வேண்டுமென்ற எண்ணத்துடன் சப்தம் கேட்ட பக்கத்தில் சென்ற போது எங்களுக்கு வழியில் கொண்டு வந்த மிக்சரை வைத்துக் கொண்டு சப்தம் போட்டதாகத் தெரிய

வந்தது எங்கள் ஆசிரியர் ராம்தாஸ் அவர்கள் என்று! நாங்கள் கூட்டமாக அவரை அடைந்தவுடன் அவர் எங்களைப் பார்த்து சிரித்து விட்டார். நாங்களும் சேர்ந்து சிரித்தோம். பின்னர் அவர் எங்களுக்கு மிக்சர் கொடுத்து திருப்தி செய்தார். அவரும் தலைமை ஆசிரியரும் பிறர் போல் நடித்தும் பலவித சப்தங்களினாலும் எங்களை நகைச் சுவையில் ஆழ்த்தினர். எங்களின் சிரிப்பு முழக்கத்தினால் வண்டி நின்று விட்டது பக்கத்து ஸ்டேஷனில். பிறகு நல்ல பசி நேரத்தில் நாங்கள் அடைந்தோம் தென்காசியை.

அங்கிருந்து மாட்டு வண்டிகள் தான் கிடைத்தன, எங்களுக்குக் குற்றாலம் செல்வதற்கு. அந்த வண்டிகளை ஒரு கையால் அசைத்தால் வண்டி முழுவதும் ஆடும். அவ்வளவு பலமானவை! சிலர் வண்டியிலும் பலர் கால்நடையாகவும் சென்றோம். ஆனால் எங்களை ஏற்ற மறுத்த மோட்டார் பின் எங்களிடம் வந்து 'நீங்கள் கண்டிப்பாக ஏறிக் கொள்ள வேண்டு'மென்று சொல்வது போல் வந்தது காலி வண்டியாக. அதன் பரிதாப நிலையைப் பார்த்து அதில் ஏறிக் கொண்டு குற்றாலத்தை அடைந்தோம் நாங்கள்.

அங்குள்ள கரையாளர் பங்களாவில் உணவு வசதி செய்யப் பட்டிருந்தது. நன்றாய்ச் சாப்பிட்டு விட்டு தூங்கினோம். பின்பு மாலை 4-30 மணிக்கு ஐந்து அருவிக்குக் கிளம்பினோம். இயற்கைக் காட்சிகளைப் பார்த்து ரசித்துக் கொண்டே சென்றோம். பாதை போய்க் கொண்டு தானிருந்தது, ஆனால் ஐந்தருவி வந்த பாடாக இல்லை. இறுதியில் ஐந்தருவியைப் பார்த்து விட்டுத் திரும்பி கீழ் அருவியில் குளித்து விட்டு வந்து ஒரு கூட்டம் கூடினோம். தமிழ் ஆசிரியர் சுந்தர ராசன் அவர்கள் தலைவராக இருந்தார். மாணவர்கள் சிலர் சிலவற்றைப் பற்றிப் பேசினர். இரவு சாப்பாட்டின் பிறகு தூங்கினோம்.

காலையில் தென்காசிக்குத் திரும்பினோம். சிலர் வண்டியில் சென்றனர். ஆனால் அவர்கள் கொடுத்து வைக்காதவர்கள் என்றே சொல்ல வேண்டும். ஏனெனில் இயற்கைக் காட்சிகளை அவ்வளவாக அநுபவிக்க முடியவில்லை இயற்கையின் எழிலை அள்ளிப்

பருகிக் கொண்டே ஆனந்தமாக நடந்து தென்காசியை வந்தடைந்தோம் நாங்கள் சிலர்.

அங்கிருந்து இரயில் மூலமாக கொல்லத்தை அடைந்தோம். இடை வழியில் 'ஆரியன் காவு' என்னும் குகைக் குடைவைப் பார்த்தோம். ஆதவன் கதிர் புக முடியாத மலையும் காடும் ஒரு பக்கம். மனதில் பயம் உண்டாகும்படியான பள்ளம் மறு பக்கம். இவைகளைக் கடந்து செல்வதற்குள் கிலி பிடித்துக் கொண்டது நண்பர்களுக்கு. நிற்க; இனிமேல் கொல்லத்தைக் கவனிப்போம்.

கொல்லத்தில் தங்குவதற்கு எங்களுக்கு ஆனந்த பவன் ஹோட்டல் கிடைத்தது ஆனந்தமாக இருந்தது. அந்த ஹோட்டல் காரர் இனிமேல் அருப்புக் கோட்டை என்றால் வெறுப்புத் தட்டும் படியாக நடந்து கொண்டார்கள் நமது நண்பர்கள். ஒவ்வொரு வரும் பஞ்சத்தில் அடிபட்ட மக்களைப் போல் மூன்று இலை சாதம் சாப்பிட்டனர். அது தற்போதைய பஞ்ச நிலையை மட்டுமல்ல, பக்குவமாய் சமைக்கப்பட்ட சாப்பாட்டின் தன்மையையும் காட்டியது. அன்று மாலை மனம் மகிழ்வடைய கடற்கரைக்குச் சென்று காலத்தைப் போக்கினோம். அங்கு ஆசிரியர் ராம்தாஸ் அவர்கள் எங்களை தன்னுடைய இன்னிசையோடு கடல் அலையின் பின்னிசை சேர்த்து பரவசப் படுத்தினார். மறுநாள் காலையில் ஓடு செய்யும் தொழிற்சாலையைப் போய்ப் பார்த்தோம். பின்பு மரத் தொழிற் சாலையைப் பார்த்து விட்டு மதியச் சாப்பாட்டிற்காக ஹோட்டலை அடைந்தோம். அன்று ஒரே நாளில் நண்பர்கள் எல்லோரும் மலையாளம் பேசக் கற்றுக் கொண்டது மிகவும் வியக்கத் தக்கது. நண்பர்களின் மலையாளப் பேச்சு அங்குள்ளவர்களை குழந்தைகள் பேசும் மழலைச் சொல் போல் மன மகிழ வைத்தது. அவர்கள் பேசும் அரை குறைத் தமிழ் எங்களுக்கு அளவில்லாச் சிரிப்பை ஊட்டியது.

பின்பு மாலை திருவனந்த புரத்திற்குப் பாட்டுக்கள் பாடிக் கொண்டே சென்றோம். திடீரென்று வந்த மணற் பரப்பு எங்கள் களங்கம், கவலையைப் போக்கி கண்ணாடி போன்ற நிலையடையச்

செய்தது. அர்மணலில் புரோனியத்தின் தாது கிடைப்பதாகக் கூறினர். மாலை திருவனந்தபுரத்தை யடைந்து வில்ஸ் ஹாஸ்டலில் (WILL'S HOSTEL) தங்கினோம். அங்கிருக்கும் பொழுது காலையில் குளிக்கச் சென்றால் குழாயில் தண்ணீர் வேகமாக வராது. மிகவும் பொறுமை சாலிக் குழாய்கள்! அன்று 8 மணிக்கு மியூசியத்தைப் பார்த்தோம். அங்கு பற்பல பறவைகள் மிருகங்களைப் பார்த்துக் களித்தோம். மறுநாள் மீன் காட்சி சாலையைப் பார்தோம். அன்று மாலை விண்ணிலை ஆராய்ச்சிக் கழகத்தைப் பார்த்தோம்.

மறு நாட் காலையில் மூன்று மணிக்குப் புறப்பட்டு டாக்சிகள் மூலம் கன்னியா குமரி முனையை 5 மணிக்கு அடைந்தோம். எங்களது துர் அதிர்ஷ்டந் தான் நாங்கள் சூரிய உதயத்தைப் பார்க்கமுடியவில்லை. சூரியன் எங்கள் கூட்டத்தைக்கண்டு பயந்து மேகங்களுக்குள்ளிருந்து வெளியே வ.ப் பயப்பட்டான். பின்பு நாங்கள் காரிலேயே வந்து நாகர் கோவிலில் ஆகாரத்தை முடித்தோம். காந்தி ஸ்தூபியை நாங்கள் காரில் இருந்தே பார்க்க முடிந்தது. அங்கிருந்து வரும் போது வழியில் மார்த்தாண்டத்தில் Y. M. C. A. கிராம அபிவிருத்திப் பண்ணையைப் பார்வையிட்டு, பின் பிற்பகல் 1 மணிக்குத் திருவனந்த புரம் வந்து சேர்ந்தோம். பொதுவாக கன்னியாகுமரி முனைக்குச் சென்றது மிகவும் மனக் களிப்பைத் தந்தது.

அன்று நடுப்பகல் ஆகாரத்திற்குப் பிறகு இரப்பர் தொழிற் சாலை சென்று அங்கு பற்பல வகையான இரப்பர் தொழில் நடைபெறுவதைப் பார்த்தோம். அன்றுமாலை 6மணிக்குப் புறப்பட்டு ஊர் வந்து சேர்ந்தோம். புறப்பட்டது முதல் திரும்பும் வரை யாதொரு இடையூறும் இல்லாமல் எங்களை இறைவன் காத்தருளினன்.

பற் பல அலுவல்களையும் பொருட்படுத்தாது தனது உடல் நலத்தையும் பேணுது பிறர்க்கென்றே உழைக்கும் பெருந்தகையராகிய தலைமையாசிரியர் அவர்கட்கு மாணவர்கள் சார்பில் நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளேன்.

# "பாட்டு"

[ A. ஜெயசீலி. 3-ஆம் படிவம் ]

தேசிங்கு மெட்டு.

1.

கூச்சல் போடுது — அண்ணே — இப்போ
கூழுக்கூட கிடைக்க லேன்னு கும்பிவாடுது

2.

பானுசீனி இல்லேயின்னு பாட்டுக்கேட்குது —
அண்ணே — இங்கே
நானுநாளா சோறில்லேன்னு ஆளுசாகுது.

3.

ஆனி சோர வேலே செஞ்சும் காசுகிடைக்கலே
அண்ணே — என்ன
பாவஞ் செஞ்சோம் நமக்குத் தொல்லே
என்னுதெரியலே

4.

ரேஷனென்னு சொல்லி நம்ம மோசஞ் செஞ்
சாங்க அண்ணே — அந்தத்
தோசம் பிடிச்சுத் தேசமக்கள் நாசமானாங்க

5.

புளியங்கொட்டை புழுத்த சோளம் உடம்புக்
காகலே அண்ணே — அது
போன நமக்கு உசிருவாழப் புகலும் வேறில்லே.

# பொடியின் மகத்துவம்.

A. கோவிந்தராஜ் V. B.

தெருவில் மிக அவசரமாகப் போய்க்கொண்டிருந்தேன். பின்னுலிருந்து "ஸார், உங்களைத்தானே" என்ற குரல் கேட்கவே திரும்பிப்பார்த்தேன். எனக்குப் பழக்கமானவர்கள் யாரும் தென்படவில்லையாதலால் பழையபடியும் நடக்கலானேன். மறுபடியும் அதே குரல் கேட்கவே, பின் நோக்கும்போது, என்னை நோக்கி ஒருவர் வேகமாய் வரக்கண்டேன்.

"என்ன, ஸார், என்னை மறந்துவிட்டீர்கள் போலிருக்கிறதே" என்று கூறிக்கொண்டே அவர் என்னை நெருங்கினுர்.

"உங்களை முன் பின் பார்த்ததில்லையே" என்றேன் நான்.

"என்ன ஸார், காஞ்சி தெப்பக்குளத்துப் படிக்கட்டில் நீங்கள் வழுக்கி விழுந்து நீரில் மூழ்கையில் நான் உங்களைக் காப்பாற்றவில்லையா, ஸார்? ஒரு நாள் பழகினும் பெரியோர் கேண்மை நீர்க்குள் பாசி போல் வேர்க்கொள்ளும் என்ற பழமொழி எவ்வளவு உண்மையா யிருக்கிறது ஸார்!" என்று பேசிக்கொண்டே வந்தார்.

யாரிவர்? ஒரு வேளை முடிச்சவிழ்ப்பவர்களின் சங்கத்தில் ஒரு அங்கத்தினராக யிருப்பவரோ என்ற சந்தேகம் ஏற்பட்டது எனக்கு. முன்பின் தெரியாதவர் என்னிடம் சிநேகம் பிடிக்கிருரே. எனினும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்றெண்ணி அவரை நோக்கி "காஞ்சிபுரம் கருப்பா, சிகப்பா என்றுகூட எனக்குத் தெரியாதே ஸார்" என்றேன்.

"உங்களை எங்கேயோ பார்த்தமாதிரி இருக்கிறதே. ஒரு வேளை கும்பகோணம், தஞ்சாவூர், திருச்சி, நாகர்கோவில்,

இராமேஸ்வரம், சென்னை முதலிய இடங்களுக்கு வந்திருக்கிறீர்களோ'' என்று மாறலானார் அவர்.

''இருக்கும் ஸார்; நான் கடவுளாக இருந்தால்'' என்றேன் நான்.

''எங்கே ஸார் போகிறீர்கள்'' என்று அவர் கேட்கவே, ''புதுக்கடை பஜாருக்கு ஸார்'' என்றேன்.

''நானும் அங்கேதான் போகிறேன். வாருங்கள் பேசிக் கொண்டே போகலாம்'' என்று தொடர்ந்து வந்தார். வரும் வழியில் என் சட்டைப்பையையும், வேஷ்டியையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டே வந்தார். அவரிடமிருந்து தப்பித்துக்கொள்ள எண்ணி, ''ஸார், நான் ஜவுளிக்கடைக்குப் போக வேண்டி யிருக்கிறது'' என்றேன்.

''நானும் வருகிறேன் ஸார்,'' என்று தொடர்ந்து வந்தார் அவர். எனக்குச் சந்தேகம் அதிகரித்தது. கொஞ்ச தூரம் சென்றதும் ''ஸார், கொஞ்சம் பொடி இருக்கிறதா'' என்றார்.

''இல்லையே ஸார்'' என்றேன் நான்.

''மடியில் பொடி டப்பி தெரிகிறதே ஸார்'' என்றார்.

நான் மடியைப் பார்த்து, ''ஸார், இது வேஷ்டியின் முடிச்சல்லவா'' என்று காண்பித்தேன். அப்போது அவர் முகத்தைப் பார்க்கவேண்டுமே! இஞ்சி தின்ற குரங்கு என்பார்களே அது போலத்தான். ''இதற்காகத்தானா இவ்வளவு தூரம் நடந்து'' என்று சொல்வது போல முகத்தை வைத்துக்கொண்டு வருத்தத்துடன், ''நான் போய் வருகிறேன் ஸார்'' என்று கூறி விட்டுப் போய்விட்டார் ஒரு நிமிஷத்தில் சிநேகமான என் நண்பர்.

எமது குட்டிக் கதை.

# வெங்காயம் கேட்ட வரம்.

(S Picharammal, Form VI B.)

ஓர் ஊரில் ஒரு பாட்டி வாழ்ந்து வந்தாள். அவள் ஒருநாள் வெங்காயம் நறுக்கிக் கொண்டிருந்தாள். அதில் ஒரு வெங்காயம் தவறி ஒரு மூலையில் விழுந்து விட்டது. அந்த வெங்காயம் தன்னுடைய சகாக்கள் துன்பப்படுவதைப் பார்த்து கண்ணீர் விட்டு அழுதது. பின்னர் அது சிவபெருமானிடம் கூறி அக் குறையைத் தீர்ப்பதற்காகத் தவம் கிடந்தது.

அவ்வாறு தவம் கிடக்கும் பொழுது சிவபெருமான் அதன் முன்தோன்றி "பக்தா! உனக்கு என்ன வரம் வேண்டும்?" என்று கேட்டார். அது தன் சகாக்கள் படும் துன்பத்தைக் கூறியது. மேலும் அவர்களை அறுக்கிறவர்களது கண்களில் கண்ணீர் வரும்படி செய்ய வேண்டும் என சிவபெருமானிடம் வரம் கேட்டது. சிவபெருமான் அவ் வரத்தைக் கொடுத்து விட்டு மறைந்தார். எனவே இப்பொழுதும் வெங்காயம் அறுக்கும் போது அதன் சாறு நம் கண்களில் பட்டு கண்ணீர் வருகின்றது.

CONNEMARA PUBLIC LIBRARY
1 - JUN 1955
MADRAS



Off to TRIVANDRUM



Backwaters of Quilon.

CONNEMARA PUBLIC LIBRARY
1 - JUN 1955
MADRAS



General view of Cape Comorin

# எங்கள் பாடசாலைக் கிணறு.

P. ராஜசேகரன் I. Form.

எங்கள் பள்ளிக்கூடத்தில் ஒரு கிணறு இருக்கிறது. அது பாடசாலையின் பின்புறம் வடக்கே அமைந்துள்ளது.

தண்ணீர் தேங்காமல் இருப்பதற்காக கிணற்றைச்சுற்றி மேடை அமைப்பது வழக்கம். அதையொட்டி நமது பள்ளிக் கிணற்றைச் சுற்றிலும் மேடை அமைந்துள்ளது அவ் மேடைகளிலுள்ள பள்ளங்களில் தேங்கி மிஞ்சியவை கிணற்றோரத்தில் உள்ள தீர்த்தத் தொட்டியில் போய் பாய்கிறது.

பள்ளிக்கூடத்தில் பாடம் நடக்கும் பொழுது தண்ணீர் எடுக்கக் கூடாது என்பதன் பொருட்டு ஒரு கதவும் கிணற்றைச் சுற்றிலும் வேலியும் அமைக்கப்பட்டுள்ளது. அதும் ஒற்றையல்ல, முட்கம்பி வேலி, மர-நட்டு முள் வேலி ஆக இரட்டை வேலி. இதையும் தாண்டி தண்ணீர் எடுக்கின்றனர் பெண்கள். ஆதலால் கதவு இருந்தாலும் ஒன்றுதான்; இல்லாவிட்டாலும் ஒன்றுதான்!

மிருகங்களோ அல்லது சிறு குழந்தைகளோ தவறி விழாமல் இருக்க கைபிடிச் சுவர் சுமார் இடுப்புவரையிலும் அமைப்பர். அதே போல் சுவர் இருக்கிறது. ஆனால் அது முழங்காலுக்குக்கூட இல்லை!

முன் காலத்தில் கிணற்றருகில் பிள்ளையார் கோவில் இருந்தது. பெண்கள் சட்டத்தை மீறுவதும், பெண்கள் வகுப்பு நேரங்களில் கச முச வென்று பேசுவதையும் உணர்ந்த பிள்ளையார் எங்கோ சென்றுவிட்டார். அவர் இருந்த இடத்தில் ஆண்டு விழா போர்டுகளும், புஸ்தகங்களும் பள்ளிக்கூட வரவு செலவுக் கணக்குப் பேரேடுகளும் பிள்ளையாருக்குப் பதிலாகக் காட்சியளிக்கின்றன.

தற்போதைய மாணவர்கள் மரங்களில் ஏறி கீழே விழுந்து அபாயத்தைத் தேடினால் தன் தோழர்கள் வருந்துவர் என்று நினைத்த பிள்ளையார் மரங்களையும் கூட்டிச் சென்றுவிட்டார் அவ்விடத்தில் வைர விழா மண்டபம் காட்சியாயிருக்கிறது.

பெண்கள் அநாவசியமாக வகுப்பு நேரங்களில் தண்ணீர் எடுக்க வந்து அனுவசியமான பேச்சுக்களைப் பேசுகின்றனர். வகுப்பு நேரங்களில் தாம் பேசினால் ஆசிரியருக்கும் மாணவர் களுக்கு சங்கடமாகுமே என்ற எண்ணம் துளி அளவு கூடக் கிடையாது. வகுப்பில் அனுவசியமாகப் பேசினால் ஆசிரியர் அடிப்பார்; இங்கு பேசினால் நம்மைத் தடுப்பதற்கு யார் இருக்கிறார்கள் என்ற எண்ணமோ என்னவோ! அவர்கள்தான் பேசுகிறார்கள் என்றால் இந்த குடமும் வாளியுமாவது சும்மா இருக்காது! அவையும் சதா தங்கள் ராகங்களைப் பாடுகின்றன.

சோப்புப் போடக் கூடாது; பாத்திரம் விளக்கக்கூடாது. எண்ணெய் ஸ்நானம் செய்யக்கூடாது என்ற விளம்பரப் போடு ஒரு காலத்தில் கிணற்று அருகில் உள்ள சுவரில் உள்ளது. பலர் இச்சட்டத்தை மீறியதைக் கண்ட வர்ண பகவானும், சூரிய பகவானுமாகச் சேர்ந்து எழுத்துக்கள் யாருடைய கண்ணுக்கும் தெரியாமல் எழுத்துக்களை அழித்துவிட்டன!

1951ல் புளியூரானில் நடந்த கிணற்று அதிசயத்தைப்போல் நமது பள்ளிக் கிணற்றிலும் அதிசயம் நிகழ்ந்திருக்கிறது. முன்னொரு காலத்தில் நமது பள்ளித் தண்ணீர் நல்லநீராக விளங்கியது. அதைக் குடிப்பதற்காக உபயோகித்தனர். சில ஆண்டுகளுக்குப் பின் உப்புத்தண்ணீராக மாறியது. அதைக் குளிப்பதற்கு உபயோகித்தனர். சில ஆண்டுகளுக்குப் பின் திரும்பவும் தற்போது நல்ல தண்ணீராக மாறியிருக்கிறது. இதை மறுபடியும் குடிக்க உபயோகிக்கின்றனர். இது நமது பள்ளிக் கிணற்றில் நடந்த மகா அதிசயம். இனி என்ன நடக்குமோ, தெரியாது!

# ஆபிரஹாம் லிங்கன்.

மு. சுந்தரம்.

ஆறுவது பாரம் 'B' பிரிவு.

"அடிமையாய் இருக்கச் சம்மதிப்பவன்
தனக்கும் துரோகி; கடவுளுக்கும் துரோகி."
—லிங்கன்

மக்களால், மக்களுக்காக, மக்கள் ஆட்சியை அமெரிக்காவில் ஏற்படுத்தியவர் ஆபிரஹாம் லிங்கன். ஆண்டவன் கருணையில் நிற பேதத்திஞல் ஏற்றம், தாழ்வு இல்லை, நிறபேதம் காட்டி ஒரு சாராரை அடிமைப்படுத்தி வைப்பது அதர்மம் மட்டுமல்ல, அரசியலமைப்புக்கே தீங்கானது என்பதை உலகறியச் செய்த உத்தமர் லிங்கன். அவர் அமெரிக்காவின் பதினாறுவது ஜனாதிபதியாக இருந்தவர், அவர் ஜனாதிபதியாக இருந்த 5 ஆண்டுகளுக்குள் நீக்ரோ அடிமைகளை விடுதலை செய்து, அதனால் ஏற்பட்ட உள்நாட்டுப் போரில் வெற்றி கண்டு அமெரிக்க நாடுகளின் ஐக்கியத்தை உறுதிப்படுத்தினார். அவர் 1809-ம் ஆண்டில் அமெரிக்காவில் பரம ஏழையாகப் பிறந்தார்.

லிங்கன் ஒரு ஆண்டுகூடப் பள்ளியில் சேர்ந்து படித்ததில்லை ஆனால் தானாகவே கல்வி பயின்றார். லிங்கன் சிறுவனாயிருக்கையில் பக்கத்து வீட்டிலிருந்து ஒரு புத்தகம் இரவல் வாங்கியிருந்தான். அதை வாசித்துவிட்டு மறதியாக ஜன்னலில் வைத்துவிட்டு வெளியே சென்றிருந்தான். அவன் வெளியே சென்றிருந்த சமயத்தில் பெரிய காற்றும் மழையும் வந்து ஜன்னலில் இருந்த புத்தகத்தை நனைத்துக் கிழித்து நாசம் செய்துவிட்டது.

திரும்பி வந்த லிங்கன் தான் இரவல் வாங்கிய புத்தகத்திற்கு நேரிட்டதைக் கண்டு மனம் வருந்தினான். கிழிந்து நனைந்துபோன அப்புத்தகத்திற்குப் பதிலாக வேறு புத்தகம் வாங்கிக் கொடுப்பதற்குக் கையில் பணமுமில்லை. மனச் சஞ்சலத்துடன் புத்தகச்

சொந்தக்காரரிடம் சென்றான். "ஐயா, தங்களிடம் நான் இரவல் வாங்கியிருந்த புத்தகம் காற்றிலும், மழையிலும் அகப்பட்டு ஒன்றுக்கும் உதவாமல் கெட்டுப்போய்விட்டது. புதுப் புத்தகம் வாங்கிக்கொடுக்கவும் என்னிடம் பணமில்லை. ஆகையால் அதன் கிரயத்திற்குச் சரியாக நான் வேலை செய்து தீர்த்துவிடுகிறேன்" என்றான்.

சிறுவனின் தூய்மையான உள்ளத்தை உணர்ந்த புத்தகச் சொந்தக்காரர், "தம்பி நீ நல்ல பையன். உன்னைக் கஷ்டப்படுத்த எனக்கு இஷ்டமில்லை. இரண்டு நாள் என்னோடு வந்து மாட்டுக்குப் புல் அறுப்பதில் எனக்கு உதவி செய். அது போதும்" என்றார்.

லிங்கன் சிறு பையனாக இருக்கும் பொழுதே தன் வாழ்க்கைக்கு வழிதேட வேண்டியவரானார். ஒரு கடையில் வேலை பார்த்தார். இருந்தாலும், ஓய்வு நேரங்களிலெல்லாம் கல்வி கற்றார். நாளடைவில் சட்டப் பரீட்சையில் தேர்ச்சி பெற்றார். அவர் வக்கீல் தொழில் நடத்திய போது ஒரே நாளில் ஒரே ஜட்ஜ் முன் 2 வழக்குகளில் ஆஜரானார். இரண்டிலும் ஒரே ரீதியான சட்டப் பிரச்சனைதான் எழுந்திருந்தது. ஆனால் ஒரு வழக்கில் வாதிக்காகவும் மற்றொன்றில் பிரதி வாதிக்காவும் ஆஜரானார்.

காலையில் வாதிக்காக ஆஜராகி திறமையாக வாதாடி வழக்கை ஜயித்துவிட்டார். பிற்பகலில் பிரதிவாதிக்காக, திறமையாக காலையில் வாதாடியதற்கு நேர் எதிரிடையாக வாதாடிக் கொண்டிருந்தார்.

ஜட்ஜ் லேசான புன்னகையுடன் "ஆமாம்" காலையில் அப்படி வாதாடினீர்கள். இப்போது இப்படி வாதாடுகிறீர்களே. இந்த மாறுதலுக்குக் காரணம் என்ன? என்று கேட்டார்.

ஆப்பிரஹாம், "நீதிபதியவர்களே, காலையில் நான் தவறான கட்சிக்காக வாதாடி இருக்கலாம். ஆனால் இப்போது நான் நியாயமான கட்சிக்காக வாதாடுகிறேன் என்பது மட்டும் எனக்கு நிச்சயம்," என்றாராம்.

1856-ல் உதவி ஜனாதிபதியின் பதவிக்கு நின்று தோல்வி யடைந்தார் ஆப்ரஹாம். 1858லும் ஸெனட் உறுப்பினராக முயன்று தோல்வி, இவை மாதிரி தொழிலிலும், அரசியலிலும் பலமுறை. தோல்வி கண்டும், சதாகாலமும் ஏதாவது படித்துக் கொண்டே யிருப்பார். "இந்தப்படிப்பும் கல்வியும் உங்களுக்கு என்ன அளித்தன? நிம்மதியாக வாழ்க்கையை நடத்தக்கூட அது உங்களுக்கு உதவவில்லையே" என்று அவர் நண்பர் ஒருவர் அவரை கிண்டல் செய்தார்.

"நண்பரே கல்வி, படிப்பு இவற்றைப்பற்றி யெல்லாம் நீங்கள் தவருகவேதான் தெரிந்து கொண்டிருக்கிறீர்கள். வயிற்றுப் பிழைப்புக்காக கல்வியளிக்கப்படுவதில்லை நீங்கள் சம்பாதித்ததைக் கொண்டு என்ன செய்வது என்பதை நிர்ணயிக்கத்தான் படிப்பு பயன் படுகிறது" என்று லிங்கன் சிரித்துக் கொண்டே பதிலளித்தார்.

இதே மனிதர் 1860ல் அமெரிக்க ஜனாதிபதியாகி விட்டார். லிங்கன் அடிமைத்தனத்தை மனதார வெறுத்து, தென்நாடுகளில் உள்ள சகல அடிமைகளுக்கும் விடுதலை அளிப்பதாய் பிரகடனம் வெளியிட்டார். அவர் சொன்னர்:— 'அடிமைப்பட்டோருக்கு விடுதலை அளிப்பதன் மூலம் சுயேச்சை யானவர்களுக்குள்ள விடுதலையை உறுதிப்படுத்துகிறோம். நாம் அளிப்பதிலும் மேன்மை யுறுகிறோம், காப்பதிலும் மேன்மை பெறுகிறோம்'.

இதை எதிர்த்து, தென் நாடுகள் தனியாகப்பிரிந்து தனி சர்க்கார் அமைத்து நாட்டைத் துண்டாடத் துணிந்தனர். இக் காரணத்தினல் லிங்கன் தென்னுட்டினருடன் போரிட வேண்டிய தாயிற்று. முடிவில் வெற்றி கண்டார். நாடும் துண்டாடப்பட வில்லை; அடிமை முறையும் அகன்றது. ஆனல் அவரின் சிறப்பை யறியாத ஒரு வெறியனல் 1865ம் வருடம் சுட்டுக் கொல்லப் பட்டார்.

ஆப்ரஹாம் லிங்கன் தான் கொலை செய்யப்படக்கூடும் என்பதை முன் கூட்டியே அறிந்திருந்தாராம்.

ஒரு நாள் காலை எழுந்ததும் தான் கண்ட விசித்திரக் கனவை மனைவியிடம் கூறுகிறார். அவர் கண்ட கனவு இதுதான்:—

பலர் துக்கித்து அழும் சப்தம் கேட்டது மாதிரி இருந்ததாம். உடனே லிங்கன் எழுந்து அந்த இடத்திற்குச் சென்றாராம். அந்த இடம் அமெரிக்க ஜனாதிபதியின் வாசஸ்தலமான ஒயிட் ஹவுஸின் கிழக்கு அறை. அங்கே போய் பார்த்தபோது ஒரு சடலம் கீழே கிடத்தப்பட்டிருந்தது. அதற்கு மரியாதைகள் செய்யப்பட்டிருந்தன. இதைப்பார்த்த லிங்கன் அங்கு காவல் இருந்த காவலாளியிடம், "இறந்து போனது யார்?" என்று கேட்டாராம். அதற்கு அந்தக் காவலாளி "ஜனாதிபதி இறந்து போய் விட்டார்; யாரோ அவரைக் கொலை செய்து விட்டார்கள்" என்று பதில் கூறினான். அவர் கனவு பலித்தது!

அமெரிக்க உள்நாட்டுச் சண்டையில் இறந்தோர் ஞாபகார்த்தமாக கெட்டிஸ்பர்க் நகரில் ஒரு சின்னத்தை திறந்து வைக்கையில், ஜனநாயகத் தத்துவத்தை உணர்த்தி லிங்கன் செய்த பிரசங்கம் அமரப் புகழ் வாய்ந்தது. இந்தப் பிரசங்கத்தை எண்ணற்ற பேர் படித்தனர், இன்னும் எண்ணற்ற பேர் படிப்பர் என்பதில் சந்தேகம் இல்லை அவ்வரிய பிரசங்கம் இல்லினாஸ் ஸ்டேட்டில் உள்ள ஸ்பிரிங் பீல்டில் லிங்கனுடைய சமாதியில் ஒரு தகட்டில் பொறிக்கப்பட்டிருக்கிறது.

சில ஆண்டுகளுக்கு முன்னால் ஆபிரஹாம் லிங்கனைப் பற்றி ஒரு அமெரிக்கப் பிரமுகர் புகழ்ந்து கூறியது:—

'வானைத்தொடும் அளவுக்கு வளர்ந்திருக்கும் பர்வதங்கள், ஆழ்கடல், ஒளிர்விடும் தாரகைகள் இவற்றைக் குறித்துப் புதிதாகக் கூறுவதற்கு நமக்கு என்ன இருக்கிறது? லிங்கனைப் பற்றியும் அதே மாதிரி புதிதாகக் கூற எதும் இல்லை. ஆத்ம உயர்வில் இமயத்தை ஒத்திருந்தார் அவர். லட்சியத்தில் உண்மையும் தூய சேவா உணர்ச்சியும் ஒளிர் விடும் நட்சத்திரமாக வாழ்ந்தார், இன்றும் அவர் நினைவு அவ்வுயர் உண்மைகளைப் போதிக்கிறது'.

# அன்றும் :: இன்றும்.

வித்துவான். சி. சுந்தரராசன், தமிழாசிரியர்.

தமிழ் என்ற சொல்லுக்கு இனிமை என்று பொருளாகும். இத்தகைய இனிமைத் தமிழ் மொழியைப் பேசி வந்தவர்கள் தமிழராவர். அவர்கள் வாழ்ந்த இடம் தமிழ் நாடாகும். அதாவது 'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகத்து' என்று ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியனோரோடுடன் பயின்றவரான பனம்பாரனார் என்பவர் தொல்காப்பியப் பாயிரத்தின்கண் தமிழகத்தின் எல்லையை வரையறுக்கிறார். இதற்கிடையே வாழ்ந்து வந்த மக்கள் எப்பண்பை உயர்பண்பாகக் கொண்டு ஒழுகினர் என ஆய்வோம்.

பண்டைக் காலத்துப் புலவர்கள் 'குன்றனைய திருநெடுந்தோள்' என்றும் 'முடிவுத்தோள்' என்றும் 'வரைசெறிந்த தோள்' என்றும் 'பணைத்தோள்' என்றும் 'எடு அடு தோள்' என்றும் மலை, தூண், முழவு முதலியவைகளைத் தோளுக்கு உவமையாக எடுத்தாண்டிருத்தலின் அக்காலத்தில் வாழ்ந்த ஆண்கள் உடலுரமும் உள்ள உரமும் வாய்க்கப் பெற்று சொல்லொணு வீரத்தோடு வாழ்ந்து வந்தனரெனத் தெரிகிறது

பழந்தமிழ் மக்கள் வீரத்தைத் தங்கள் உயிரனையவொரு பொருள் எனக் கருதி ஒழுகி வந்தனர். அவர்கள் வாழ்வு வீரவாழ்வு என்றே கூறல் பொருந்தும். பேச்சிலும் மூச்சிலும் வீரம்; செயலிலும் துயிலிலும் வீரம்; உடையிலும் நடையிலும் வீரம்; கனவிலும் நனவிலும் வீரம். இவைகளே அவர்களது அன்றாட வாழ்க்கை. 'பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாவள' என்று கூறியது இடைக்காலத்தில். ஆனல் பழந்தமிழ் மக்கள் வீரவுணர்ச்சி காட்டாத நாளை வெறு நாளென எண்ணினர்.

மேலும் வேட்டையாடல், மல்லாடல், ஏறுதழுவுதல் போன்ற வீர விளையாட்டுக்களும் தமிழகத்தின் கண் நிகழ்ந்து வந்தன என்பதற்குச் சான்றுகளும் உள.

வீரமாவது யாது? தனக்கு உண்டாகிய இழுக்கினைக் கொல்லவும், உரியதைக் கொள்ளவும் எழுகின்ற எழுச்சியே வீரமாகும். இதுவே சிறந்த பண்பு. இப்பண்பிலாதாரை மக்களென்றே கருதலாகாது. மாக்கள், கடையர், கயவர் என்று கூறுதற்கு உரியரே யன்றி வேறெவற்றிற்கும் உரியராகார். இனிப் பண்டைக்காலத்துப் பெண்மணிகளின் வீரத்தைப் பற்றிக் கண்ணுறுவாம்.

நரம்பு எழுந்து தோல் திரைத்த முதியவள் ஒருத்தியின் புதல்வன் போர்க்கோலந் தாங்கி பொருகளம் சென்றனன். அவன் போரில் புறமுதுகிட்டுப் பட்டான் என்று பலர் போந்து அம் முதியவள்பால் கூற, அது கேட்ட அவள், தன் முதுமையைச் சிறிதுங் கருதாது, வாள்கை யெடுத்து 'இவர்கள் கூற்று மெய்யாயின் அவனுக்குப் பாலூட்டிய எனது மார்பை இவ்வாளால் அறுத்தெறிவேன்!' என்று எழுந்து பொருகளம் சென்று மைந்தனைத் தேடி ஆண்டு மலையெனக் குவிந்து கிடந்த பிணங்களை வாளால் பெயர்த்துப் பெயர்த்துப் பார்த்தனள். ஓர்பால் தன் மகன் மார்பிடை ஊறு தாங்கி இறந்திருந்ததைக் கண்டு அத் தாய் அவனை ஈன்ற ஞான்றினும் பெரிதும் உவந்தனள். இவளல்லளோ வீரத்தாய்?

மற்றுமொரு பெண்மணியின் தமையன் போர்க்களத்தில் மறப்போர் புரிந்து இன்னுயிர் நீத்தான். மறுநாள் தன் கொழுநன் போருடை பூண்டு போர்க்களஞ் சென்று மாற்றார் பலரை மாய்த்து மன்னுயிர் நீத்தனன். மீளவும் மாற்றார் செருப்பறை கேட்டு அப் பெண் தன்னொரு மகனை அழைத்துத் தலைமயிர் நீவி, போருடை புனைந்து வேல்கைத் தந்து போர்க்களம் போய் வருக என்று ஆக்கங்கூறி மகிழ்வுடன் வழியனுப்பினள். இவளது வீரம்

கொழுநன், தமையன் ஆகிய இவ்விருவரின் பிரிவையும் மறக்கச் செய்தது! இதனையே

கெடுக சிந்தை! கடிதிவள் துணிவே!
மூதின் மகளிராதல் தகுமமே!
மேனா ளுற்ற செருவிற் செருவிற்இவள் தன்னை
யானை யெறிந்து களத்தொழிந் தனனே!
நெருநல் உற்ற செருவிற் கிவள்கொழுநன்
பெருநிரை விலங்கி ஆண்டுப்பட் டனனே!
இன்றும், செருப்பறை கேட்டு, விருப்புற்று மயங்கி,
வேல்கைக் கொடுத்து, வெளிதுவிரித் துடீஇப்,
பாறுமயிர்க் குடுமி யெண்ணெய் நீவி,
ஒருமகன் அல்ல தில்லோள்
செருமுகம் நோக்கிச் செல்கென விடுமே!

என்று ஒரு புற நானூற்றுப் பாடல் தெற்றென விளக்குகிறது.

பண்டைக் காலப் பெண்மணிகள், வீரவாழ்வு வாழ்ந்த துடன் நில்லாது விவேகமும் செறிந்தவராய் வாழ்ந்தனர் என்று பண்டைய நூல்கள் தெளிவுற விளக்குகின்றன. ஒளவைப் பெருந்தகையை எடுத்துக் கொண்டால் சுருங்கிய சொற்களால் பெரும்பொருளைத் தெளிவாக நீதியாக்கி எடுத்துரைக்கிறார் மக்களுக்கு.

மேலும் தமிழ்நாட்டில் குறவர், வேட்கோவர், பாணர் மரபினைச் சேர்ந்த பெண்களும் கல்வி கற்றுக் கவிபாடும் ஆற்றல் பெற்று முடியுடை மூவேந்தராலும், சிற்றரசர் பல்லோராலும், வள்ளல் பலராலும் சிறப்பிக்கப் பெற்றனர். குறமகள் இளவெயினி வெண்ணிக் குயத்தியார், காக்கை பாடினியார், நச்செள்ளையார் போன்ற பெண்மணிகளின் பாக்கள் கற்போருள்ளத்தைக் கவரத் தக்கனவாயும், அவர்களது புலமையை உள்ளவாறு உணர்த்துவன வாயும் உள்ளன.

இத்தகைய சீரும் சிறப்பும் பெற்றுத் தமிழகத்தின் திலகங் களாய் மிளிர்ந்த நங்கையர்கள் வாழ்ந்த நாட்டின்கண் தோன்றிய வரில் பெரும் பாலோர் கோழைகளாக உள்ளனர். ஏன்?

ஆண்கள் பெண்களை ஒரு கருவியாக்கிக் கொண்டு 'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு' என்றும்; விதிவிலக்காக ஒரு சிலர் படிப்பினும் 'நுண்ணிய நூல்பல கற்பினும் பெண்ணறிவென்பது பெரும் பேதமைத்தே' என்றுங்கூறி உரிமை யொன்றையுங் கொடாது பொம்மையைப் போல நடத்தி வருகிறார்கள். இந்நிலைமை நீக்கப்பட வேண்டும். அதற்காகப் பெண்கள் பெரும் பங்கெடுத்து உழைத்தல் வேண்டும்.

மேல் நாட்டையும் நம் நாட்டையும் சீர் தூக்கிப் பார்ப்பின் நம் நாட்டின் நிலை மேல்நாட்டு நிலையினும் எவ்வளவு தாழ்ந் துள்ளது என்பதை நன்கறியலாம். அங்கு

"புத்தம்புதிதான நூலெழுதிப் போற்றப்
பரிசுகள் பெறுவ ரங்கே பெண்கள்
புத்தகம் தொட்டாலும் கத்துகிற ரிங்கு
பொல்லாத செய்கைகள் தோன்று மென்று"

என்றும்

வான ஊர்திகளில் வட்டமிட்டுப் பிறகு பாராச் சூட்டில் அச்ச மின்றி இறங்குகிறார்கள். ஆனால் நம்நாட்டின் கண் அப்பாடி அம்மாடி என்று சொல்லி அஞ்சி இறங்குகின்றனர் அழகர்மலை. அங்கு ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானம் என்று சொல்வதோடமையாது செயல் முறையிலும் நடத்திக் காட்டு கின்றனர். ஆனால் அந்நாள் என்று வருமோ? என்றெண்ணி ஏங்க வேண்டியிருக்கிறது இங்கு!

வருங்கால உலகை உருவாக்கும் புத்துலகச் சிற்பிகளாகிய சிறார்களை வளர்ப்பது மாதர்களது கடமையாகும். அவர்கள் நன்கு கற்றிருந்தால்தான் தன் மக்களைச் செவ்வனே பயிற்ற முடியும். ஒரு குடும்பத்தில் ஆடவன் கல்வி கற்றிருப்பின்

மிகச் சிலருக்கே பயன்படும். பெண்கள் கல்விகற்பின் அது பலருக்கும் பயன்படும். பொதுவாக ஒரு நாடு முன்னேற்ற மடைய வேண்டுமாயின் அந்நாட்டிலுள்ள பெண்களனைவரும் கல்வி கற்றல் வேண்டும். ஒரு நாடு பெண்களால்தான் உயர் வடையும் என்பதைக் குறித்து:—

பெண்களால் முன்னேறக்கூடும் எந்தநாடும்—இந்தநாடும்
கண்களால் வழிகாண முடிவதைப் போலே
கால்களால் முன்னேற முடிவதைப் போல
பெண்களால் முன்னேறக்கூடும் எந்தநாடும்—இந்தநாடும்

என்றும்

படியாத பெண்ணினால் தீமையுண்டாகுமே தவிர என்னபயன் விளைப்பாள் அந்த ஊமை என்று நயமாக எடுத்துரைக்கிறார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள். ஆகையால்

பெற்ற தாய்தந்தை மாரே—நும்
பெண்களைக் கற்க வைப்பீரே!
இற்றைநாள் பெண்கல்வி யாலே
முன்னேற வேண்டும் இந்த-வையம் மேலே!

ஆதலால் பெற்றோர்களே! பெண்ணடிமையைப் போக்கவும் பெண்ணுரிமையைக் காக்கவும் பெண்களைப் படிக்கவைத்துப் பெரும் பயன் அடைவீர்களாக.

---

நாம் நம்பும் நன்மை நம்மை ஏமாற்றலாம்; ஆனால் நாம் பயப்படும் தீமையும் பொய்யாகலாம்.

*    *    *    *    *

உயிர் வாழ்வனவற்றை யெல்லாம் நேசிப்பதே உயர்ந்த தியானம்.

# THE COSMOPOLITAN SPORTS.

(Proprietor:- PRITHVIRAJ KOHLI, B A LL. B;)

PALAMCOTTAH.

*Makers of Sports goods of Quality*

*Suppliers of Paper & Note-Books*

*Stockists of Citizenship Training Articles*

*E. P. N. S. Trophies, Cups & Silver*

*Medals of attractive & various designs.*

Factories: Jullundur.

# B. L. GUPTA & Co.,

SPORTS SPECIALISTS

**Post Box No. 8.**

PALAMCOTTAH.

All Kinds of Sports Goods are available at all times at very Competitive Prices.

A TRIAL WILL CONVINCE YOU.

CONNEMARA PUBLIC LIBRARY
1 - JUN 1955
MADRAS

# Our Old Boys' Section.

## "பெருமை கொள்கிறேன்"

By, ஓர் பழைய மாணவன். (1929—33).

"அருப்புக்கோட்டை மாணவர்களா! அடக்கம் உடையவர்கள், முயன்று படிப்பவர்கள்; எனக்குத் தனிப் பிரியம்" 1932ல் ஒரு கல்லூரிப்போசிரியர் மேனுட்டவர், கூறியது.

"அருப்புக்கோட்டைக் காரர்களா! அடேயப்பா! பெரிய கெட்டிக்காரா களாயிற்றே! இந்தப் பூனையும் பால்குடிக்குமா என்றிருப்பார்கள், ஆனல் காரியத்திலேயே கண்ணுயிருப்பார்கள்". 1934ல் கல்லூரி மாணவர் சிலரின் பொருமையின் பேரில் அறியாது சொன்ன, பாராட்டுரை.

"சார்! எத்தனையோ ஆண்டுவிழாக்கள் பார்த்திருக்கிறேன் பெரிய பெரிய பள்ளிக்கூடங்களில் நடந்த நாடகங்களையும் பார்த்திருக்கிறேன். இந்த வருஷம் நமது பாடசாலை ஆண்டுவிழாவைப் போல், இந்த வருஷ நாடகத்தைப் போல் நான் பார்த்ததில்லை". 1942ல் ஓர் ஆசிரியர் வியந்து உரைத்தது.

"ஒற்றுமையும், உற்சாகமும் கொண்டு, யாரொருவரின் இடையூறும் இல்லாமல், ஒன்றுபட்டு ஆசிரியர்கள் உழைப்பதும் முடியும் என்பதை இப் பாடசாலையில் தான் நான் பார்க்கிறேன்". வெளியூரிலிருந்து வந்து வேலை பாரத்த ஓர் ஆசிரியரின் பேச்சு.

"மாணவர்களிடையே ஒழுக்கமும் கீழ்ப்படிதலும் இல்லாவிட்டால் நிம்மதியாக வேலை செய்ய முடியாது. நிமமதியுடன் வேலை செய்யும் சந்தர்ப்பம் இங்கே இருப்பது குறிப்பிடத்தக்க அம்சம்", பல ஊர்களில் ஊழியம் செய்துள்ள ஒருவரின் அனுபவ வாக்கு.

"நீங்கள் என்ன தானய்யா வேலை செய்கிறீர்கள்?

அருப்புக்கோட்டையில் போய்ப் பாருங்கள் என்று எல்லாரிடமும் ஆபீசர் கூறுகிருரே, ஒரு தடவை வந்து பார்க்கலாமா?'' தலைமை ஆசிரியர்கள் சந்திப்பின் போது நடைபெற்ற உரையாடல். (1947)

"மேனுடுகளில் உள்ள பள்ளிக்கூடங்களில் கூட இல்லாத அம்சங்கள்; இதுபோன்ற பாடசாலையில் எதிர்பார்க்கக் கூடாத சிறந்த வேலை முறைகள்''. அமெரிக்க நாட்டு அறிஞர் சிலர் பாடசாலைக்கு விஜயம் செய்த போது புலப்படுத்திய கருத்து.

''என் பிள்ளைகளை ஹைஸ்கூலில் சேர்க்கவேண்டும். எந்த ஊருக்கு அனுப்பலாம்? அருப்புக்கோட்டைதான் பக்கத்திலிருக்கிறது. நாடார் ஹைஸ்கூல் எப்படி?''. ஒரு பெற்ருேரின் கேள்வி.

''பையன் படிப்புடன் ஒழுக்கமும் பெறவேண்டுமானல் அருப்புக்கோட்டை நாடார் ஹைஸ்கூலுக்குத்தான் அனுப்ப வேண்டும்''. மற்ருெரு பெற்ருேரின் பதில்.

இது போல் இன்னும் எவ்வளவோ கூற முடியும், என் ஒருவனது அனுபவத்திலிருந்தே எனில், மற்றையோர் பலரிடமும் அறிவதாயின் காவியம் பெரிதாய்ப் புனையலாம்.

யாவராலும் பெருமைப் படுத்திப் பாராட்டப்படுவது நமது கலைத் தாயாகிய சைவபாநு க்ஷத்திரிய உயர்தர வித்தியாசாலை. காரணம் என்ன? கல்வித் திறமையா? அதுமட்டுமல்ல, அனைத்திலும் உயர்ந்த ஒழுக்கம் மாணவரிடை வளர்க்கப்படுவதுமே. பாடசாலையின் நிர்வாகிகள், தலைமைஆசிரியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்ருேர்கள், பொதுமக்கள் அனைவரும் இது வகையில் ஒன்றுபட்ட கருத்துள்ளவர்களாக ஒழுக்கத்தில் மிகுந்தியும் சிரத்தை கொண்டிருக்கிருர்கள். நல்லொழுக்கம் உள்ளவர்களிடம் அறிவும் திறமையும் தாமாகவே வந்து அமையும் அன்ருே!

இப் பாடசாலையில் படித்தமை பற்றிப்பெருமை கொள்கிறேன். நான் ஒருவன்மட்டுமா? படித்தவர்கள் அத்தனை

பேருந்தான். படிப்பவர்கள் இப்பெருமை கொள்வதற்கு ஒரே வழி தான் உண்டு. அடக்கமும் பணிவும் உடையவராக விழுப்பந்தரும் ஒழுக்கத்திற் பற்றுடைமையே அவ்வழி.

படிக்கும் மாணவர்கள் அனைவருக்கும் இப்பெருமை உண்டாக வாழ்த்துகிறேன்.

---

# ஓரே அறை!

ச. ப. மாணிக்கவாசகன்.

அன்று மத்தியானம் சூரிய பகவானின் கிருபை கொஞ்சம் தாராளமாகவே இருந்தது! ஆபீஸ் நாற்காலியில் உட்கார்ந்திருந்த நான், எதிரில் இருந்த ஒரு சிறு ரிஜிஸ்டரைக் கையில் எடுத்துக் கொண்டு விசிறலானேன். கனமான மத்தியான சாப்பாட்டின் எதிரொலி ஒரு பெரிய ஏப்பமாக வெளி வந்தது! ஏப்பத்தின் சப்தம் என் காதில் விழுந்தவுடன் "ரேஷனில் ஏழு அவுன்சு" என்று என் வாய் முணு முணுத்தது! என்னையறியாமலே லேசாக சிரித்துக்கொண்டே நாற்காலியின் பின்னால் சொகுஸாகச் சாய்ந்தேன். சிறிது நேரத்தில் என் கையிலிருந்த ரிஜிஸ்டர் கொஞ்சங் கொஞ்சமாக நழுவ ஆரம்பித்தது! கண்களும் தாங்களாகவே மூடிக்கொண்டன.

திடீரென்று ஆபீஸர் அடித்த 'காலிங் பெல்' (CALLING BELL) லின் சப்தம் கேட்டு எழுந்து அவரது அறைக்கு ஓடினேன். ஆபீஸரது முகம் 'எள்ளும் கொள்ளும் வெடிக்கும்' என்பார்களே, அதுபோன்றிருந்தது. கையில் இருந்த ரிஜிஸ்டரை "திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ்" வேகத்தில் புரட்டி, கடைசி பக்கம் வந்ததும், அதில்

தனது ஆள் காட்டி விரலை வைத்துக்கொண்டு தலையை நிமிர்ந்தார்! அவ்வளவு தான்! எனக்கு உச்சி முதல் உள்ளங்கால் வரை ஒரு முறை குபீரென்று வியர்த்தது. நெஞ்சு பலமாகத் துடித்தது. அதன் துடிப்பு ஓசை "இரவு நேரக் கடிகாரம்" ஓசை போல் என் காதுகளில் மிகவும் தெளிவாகக் கேட்டது! ஆபீஸர் நெற்றியைச் சுழித்து, கண்களை இடுக்கி, முறைத்துப் பார்த்துக் கொண்டே அவரது "வெள்ளைக்காரத்" தமிழில் பேசலானார். "ஏன் மிஸ்டர்! நீங்க வேலை பார்க்கும் அலகு ரொம்ப நன்றாய் இருக்கிறது" என்று கடன்காரனைப் போல் உறுமினார்! எச்சில் எல்லாம் வறண்டு போன வாயை ஒரு தடவை மென்று விழுங்கிக் கொண்டே "என்ன" என்றேன். ஆனால் வார்த்தைகள் தொண்டையிலேயே நின்றுவிட்டன. ஆபீஸர் மீண்டும் தொடர்ந்தார். "இப்படி இந்த ரிஜிஸ்டர் முடிந்து போகுமட்டும் ஏன் என்னிடம் ரிப்போர்ட் கொடுக்க வில்லை" என்று உரத்த குரலில் சொன்னார். "ஒரு குஷ்டரோகியின் முகத்தையாவது சிறிதுநேரம் பார்த்துச் சகித்துக் கொள்ளலாம்". ஆனால் அப்போது என் கண்கள் அவரது முகத்தைப் பார்க்கப் பயந்து ஒருதடவை சுழன்று, அந்த சுழற்சியில் தைரியமடைந்தது போல் மீண்டும் அவரது முகத்தைப் பார்த்தது. சட்டையில் உள்ள பொத்தானை கையால் திருகிக்கொண்டே "அ .. து" என்றேன். ஆபீஸர் கையில் வைத்திருந்த பேப்பர் வெயிட்டை (PAPER WEIGHT) என் முகத்திற்கு நேராகக் காட்டி, "போய்! உமது சமாதானம தேவையில்லை! உடனே மெஜ—ரா போய் இரண்டு ரிஜிஸ்டர் வாங்கி வாரும்" என்று இடி முழக்கம் போல் முழக்கினார். இன்னும் கொஞ்ச நேரம் அவர் முன்னால் நின்றால், அவர் சாக்கிய நாயனாராகவும், அடியேன் "அம்பலத்தாடிய பாதன்" ஐயனை பரமேஸ்வரனாகவும் மாற நேரும் என்று என் மனம் பயமுறுத்தியது. என் மூளை சரியாக வேலை செய்ய ஆரம்பிக்கு முன் என் கால்கள் என்னை வெளியே இழுத்துக்கொண்டு வந்துவிட்டன. வெளியே வந்ததும் அங்கே கொளுத்திய வெயில், எனக்குத் தண்ணொளி நிலவாகப்பட்டது! நெருப்பிலிருந்து நீருக்குள்

விழுந்தது போன்று என் மெய்யில் ஒரு இன்ப உணர்ச்சி பரவி, அது ஒரு பெருமூச்சாக வெளி வந்து காற்றுடன் கலந்தது. என் கால்களும் "பஸ் ஸ்டாண்டை" நோக்கி நடந்தன.

அன்று கார்த்திகை! பரங்குன்றப் பழனி ஆண்டவருக்குப் பாலாபிஷேகம்! பாலுக்குப் பதறும் பாலகனைப் பக்கங்களில் அணைத்திருந்த பெண்கள் "பஸ் டிக்கட்டுக்காக" "டிக்கட் புக்கிங்கை"ச் சுற்றி நின்று, ஒன்றும புரிந்துகொள்ள முடியாதவாறு கூச்சலிட்டுக் கொண்டிருந்தனர். பாதையில் போகிறவர்களை யெல்லாம் "ஐயா! மதுரைக்கா" "ஐயா! மதுரைக்கா" என்று பழைகாலத் தவளையாகக் கத்தும் "புக்கிங்", இன்று "வரிசையாக நின்றால்தான், டிக்கட்" என்று வாயில் உள்ள "சிகரெட்டை"ப் புகைத்து, பஞ்சாலையைப் போல் தலைக்கு மேல் போகும் புகையை, ஓரக்கண்ணால் பார்த்து ரசித்துக்கொண்டே சொன்னான்.

இந்த அமர்க்களத்தை யெல்லாம் பார்த்த எனக்கு 'மதுரை போய்ச் சேருவது' இன்றுள்ள உணவுப் பிரச்சனையை விட சற்று கடினமாகவே தோன்றியது அப்போது ஒரு வாலிபன் என்னை நோக்கி வந்தான்! அழுக்குப் படிந்து, ஒன்றிரண்டு இடங்களில் கிழிந்த சட்டை! எண்ணெயில்லாது நெற்றியில் புரண்டு கொண் டிருக்கும் தலைமயிர்! கட்டுக்கோப்பான உடல்! மொத்தத்தில் அவன் எதற்கும் துணிந்த ஒரு வாலிபன் என்று தான் தோன்றியது! ஆனால் அவன் கண்களில் வீசும் ஒளியும், அவனது நடிப்பும், பிறரை வசீகரித்து விடும்! அவன் என் அருகில் வந்து நின்று "ஸார்" என்றான்! அந்தக் குரலில் ஏக்கம் தொனித்தது! நான் கண்களை அகல விரித்து, புருவங்களை மேலே தூக்கிச் சற்று ஆச்சரியமாக "என்ன" என்றேன். அவனது கதையைத் தொடர்ந்தான்.

"நான் திருநெல்வேலி 'அந்தோணி பரனண்ட்ஸ்' பார்வர்டு ஏஜென்ஸியில் ஒரு டிராவலிங் ஏஜெண்டு" என்று சொல்லி நிறுத்தி, என்னைச் சற்று நேரம் உற்றுப் பார்த்தான்! என் முகத்தில், நான் அவன் மேல் சந்தேகம் கொண்டதாகத் தெரிந்த

தோ? என்னவோ? அவன் என் சந்தேகத்தை நிவர்த்திப்பவன் போல "நிஜமாகத்தான் ஸார்" என்று சொல்லிக் கதையைத் தொடர்ந்தான். "நேற்றைய முன் தினம் கடன் வசூலுக்காக இந்த ஊருக்கு வந்தேன்! எனக்கு வசூல் 500 ரூபாய் பிரிந்தது! அந்தப் பணத்துடன் இந்த "பஸ் ஸ்டாண்டுக்கு" வந்தேன்! இங்கே....!" என்று சொல்லி நிறுத்தி விம்மினன். என் மனம் இரக்கங்கொண்டது போல் தெரிகிறது. "இங்கே என்ன நடந்தது" என்று சற்று வேகமாகவே கேட்டேன்! அவன் பெருமூச்சுடன் மீண்டும் ஆரம்பித்தான். "இங்கே! நான் வைத் திருந்த பணத்தை யெல்லாம் எவனே "பிக் பாக்கெட்" அடித்து விட்டான்" என்று நிறுத்தினன் அவன் குரலில் நடுக்க மிருந்தது. என் மனமும் அவன் கதையை உண்மையென நம்பி தனக்கு நேர்ந்தது போலவே வருந்தியது! என் வாய் அவனுக்கு அனுதாபம் தெரிவிப்பது போல "அட பாவமே" என்றது. அவன் மீண்டும் ஆரம்பித்தான் "நான் இவ்வூர் வாடிக்கைக்காரர், மற்றும் பெரிய மனிதர், யாவரையும் கேட்டு விட்டேன் பிரயோஜனம் இல்லை! சார்! நீங்களாவது ஒரு மூன்று ரூபாய் கொடுங்கள் ஊருக்குப் போனவுடன் அனுப்பிவிடுகிறேன்" என்று ஒரே மூச்சில் சொன்னன். அவனது குரல் மிகவும் தழ தழுத்திருந்தது. பிச்சைக்காரனைப் போன்ற நிலைமை ஏற்பட்டு விட்டதே! என்று ஏங்கினன் போலும்.

நான் மிகவும் இரக்கமுள்ளவன். இளகிய மன முடையவன் என்று தான் எண்ணிக் கொண்டிருந்தேன்! ஆனல் அவன் பணங் கேட்ட போது எனக்கு இரக்கம் உண்டாக வில்லை! ஆனல் "பணத்தின் சக்தி" எனக்கு ஒருவாறு விளங்கியது. மூளையைத் தட்டி யெழுப்பி அதனுடன் கலந்தாலோசனை செய்ய விரும்பிய வன் போல் தலையைச் சொறிய லானேன்! எதிரில் இருந்தவன் முகம் மாறியது! அவன் பரிதாபகரமான குரலில் மீண்டும் ஆரம் பித்தான். "ஸார், இந்த மோதிரத்தின் விலை ஐம்பது ஆனல் இதை வைத்துக் கொண்டு ஒரு 25 ரூபாய் கொடுங்கள். திரும்பி வந்து பணத்தைக் கொடுத்துவிட்டு வாங்கிக் கொள்கிறேன்

என்றான். அவனது கையில் பளபளப்பான ஒரு மோதிரம் இருந்தது. என்கண்கள் மாத்திரம் அதைச் சந்தேகத்துடன் உற்றுப் பார்த்து, சற்று நேரத்தில் திருப்தி அடைந்தன.

இதே சமயத்தில் "தம்பி" என்ற சப்தத்தைக் கேட்டுத் 'திரும்பிப் பார்த்தேன். ஒரு பெரியவர்! வயது 70 இருக்கும்! அந்த வெயிலிலே நடுங்கிக் கொண்டிருந்தார். நான் அவரை 'என்ன" என்றேன். அவர் இடை இடையே இருமிக் கொண்டே பேச ஆரம்பித்தார். "தம்பி நான் மதுரைக்குப் போக "டிக்கட்" வாங்கினேன்! ஆனால் அவசரமாக வீடுவரை போய்வர வேண்டியிருக்கிறது. நீ மதுரை போவதாக இருந்தால் என் டிக்கட்டை வாங்கிக் கொள்" என்றார். நான் என்ன செய்தேன் என்பதைச் சொல்லவா வேண்டும்? பணத்தைக் கொடுத்து டிக்கட்டை வாங்கிக் கொண்டேன்! டிக்கட்டை வாங்கியவுடன் "காஞ்சிபுரத்திலேயேக் காசியைக் கண்டு விட்டது" போன்ற உணர்ச்சி உண்டாயிற்று பஸ்ஸை நோக்கிச் "சிங்க ஏறு" என நிமிர்ந்து நடக்கலானேன். ஆனால் பின்னால் நின்ற வாலிபன் "ஸார்" என்றான். அப்பொதுதான் எனக்கு அவன் மோதிர ஞாபகம் வந்தது. உடனே "பாக்கெட்"டில் கையை வைத்தேன். எதிரிலிருந்தவன் முகமும் மலர்ந்தது. பணத்தை எடுத்துக் கொடுத்து விட்டு மறந்து விடாமல் மோதிரத்தையும் வாங்கிக் கொண்டு, புறப்பட்டு விட்ட பஸ்ஸை நோக்கி ஓடினேன். பஸ்ஸிலும் தொத்திக் கொண்டேன்.

பஸ் ஓட ஆரம்பித்ததும் இலேசாகக் குளிர்ந்த காற்று என் முகத்தில் பட்டது. "அப்பாடா" என்று வாய்விட்டுச் சொல்லி பஸ்ஸின் கடைசி சீட்டில் சாய்ந்தேன். சிறிது தூரம் பஸ் போனதும் கண்டக்டர் ஒரு தடவை கனைத்துக் கொண்டு, எழுந்து நின்றான். "பிரண்ட் ஸீட் ஆளெல்லாம் டிக்கட் வாங்கியாச்சா" என்று கேட்டுக் கொண்டே, தள்ளாடித் தள்ளாடி முன்சீட்டை நோக்கி நடக்கலானான். டிக்கட் சோதனை செய்த அவன் திடீரென்று "ஐயோ" என்று சப்த மிட்டுக் கொண்டே, தான் நிற்பது ஓடும்பஸ் என்பதையும் மறந்து, ஒரு குதி குதித்தான்.

அதே நேரம் பஸ் ஒரு திருப்பத்தில் திரும்பியதால், கண்டக்டர் அடியற்ற மரம் போல் பஸ்ஸினுள் விழுந்தான். எல்லோரும் ஒரே நேரத்தில் பதற்றத்துடன் 'என்ன! என்ன!' என்று கேட்டனர். அவன் தன்னை சமாளித்துக் கொண்டு வேகமாக எழுந்திருந்தான். எழுந்திருக்கும் போதே "ஐயோ! என் மோதிரத்தை எந்தத் திருட்டுப் பசங்களோ அடிச்சிக்கிட்டு போயிட்டானுவளே" என்று சொல்லித் தன் எதிரில் இருந்தவர்களை யெல்லாம் முறைத்துப் பார்த்தான். அவன் "மோதிரம்" என்றவுடன் நானும் என் மோதிரம் இருக்கிறதா வென்று பார்த்துக் கொண்டேன்! கண்டக்டர் மீண்டும் ஆரம்பித்தான். 'அதில் "S" என்ற எழுத்துக் கூட இருந்துச்சு' என்முன்! என்ன ஆச்சரியம்! என் மோதிரத்திலும் "S" என்ற எழுத்து இருக்கிறது! என் மூளை கலங்கியது! உலகமே என் முன்னால் ஒரு சுற்று சுற்றியது. அதற்கு மேல் அவன் கூறிய வார்த்தைகள் என்காதில் விழவில்லை. என் மனதில் ஒரு பெரும் போராட்டம்! அவன் திருடனா? அந்த வாலிபன் திருடனா? இதே கேள்வி என் மனத்தை வெடிக்கச் செய்து விடும்போல் இருந்தது. வியர்வை தாரை தாரையாக வழிந்தோடியது. கண்டக்டர் மீண்டும் சொன்னான். என் மோதிரத்தை எடுத்தவன் இந்த பஸ்ஸிலேயே இருக்க வேண்டும்! அவன் என் கையில் அகப்பட்டால் ஒரே அறை! ஒரே அறை!............? அவன் கண்களில் தீப்பொறி பறந்தது. என் கை, கால் களெல்லாம் வெட வெட என நடுங்க ஆரம்பித்தன.

நான் என்னை யாரும் கவனிக்கிறார்களா? என்று கவனித்தேன்! ஒருவரும் பார்க்கவில்லை! உடனே கையிலிருந்த மோதிரத்தைக் கழற்றி வாயில் போட்டுக்கொண்டேன்! அட கடவுளே! நான் வாயில் போடுவதைக் கண்டக்டர் பார்த்துவிட்டான்! ஆம பார்த்து விட்டான்! என் இருதயத் துடிப்பு அப்படியே நின்று விடும் போலிருந்தது! ஐயோ! அவன் என்னை நோக்கி வந்து கொண்டிருக்கிறான்! அவன் வாய் "ஒரே அறை! ஒரே அறை!" என்று முணு முணுக்கிறது. ஐயோ!. இன்னும் சற்று நேரத்தில், 'குட்டிக்குரா' பவுடர் பூசிய என் கன்னத்தில் ?என் கால்கள்,

பின்னோக்கி இழுக்கின்றன! கொஞ்சங் கொஞ்சமாக நகர்ந்து கொண்டே இருக்கிறேன். ஐய்யோ! அந்த சீட்டின் கடைசிக்கு வந்துவிட்டேன். இன்னும் கொஞ்சம் நகர்ந்தால் கீழே விழ வேண்டியது தான்! அட கடவுளே! அவன் வேகமாக வருகிறானே!....பார்த்து யோசிப்பதற்குள் "ஐயோ" என்று வாய்விட்டு அலறினேன். ஆம், தலை குப்புற ஓடும் பஸ்ஸிலிருந்து கீழே விழுந்தேன்.

* * * *

இப்பொழுது தான் உணர்வு வருகிறது. கண்ணை இலேசாகத் திறக்கிறேன். என்ன ஆச்சரியம்! நான் இருப்பது ஆஸ்பத்திரியில். என் முன்னே வெண்ணுடை தரித்த டாக்டரும் நர்சும். மோதிரம் எங்கு சென்றதென்று தெரியவில்லை, நானும் அறிய விரும்பவில்லை.

---

---

*அழகான ஒரு பொருள் நிலையான இன்பமளிக்கும்.*

* * * *

*அகில உலகமும் என் நாடு, அனைவருக்கும் நன்மை செய்வதே என் மதம்.*

* * * *

*தியானத்தினால், நாம் எதிர்பார்ப்பதைவிட அதிக பலன் கிடைக்குமென்பது ஆன்றோர் வாக்கு.*

* * * *

*அழகே வாய்மை, வாய்மையே அழகு.*

## 61-வது ஆண்டு விழாவின் போது

தலைமை ஆசிரியர் சமர்ப்பித்த

# பள்ளி ஆண்டு அறிக்கை.

மேன்மை தங்கிய அவைத் தலைவர் அவர்களே! திருமதி. ஒயிட் அம்மையார் அவர்களே! கனதனவான்களே, பெற்றோர்களே, பழைய மாணவ, மாணவிகளே, உங்கள் அனைவருக்கும் என் அன்பார்ந்த வந்தனம் கூறி மன மகிழ்ச்சியுடன் உங்களை வரவேற்கிறேன்.

இச்சமயத்தில் உங்கள் முன்பு இப்பள்ளியின் 61-வது ஆண்டு அறிக்கையை சமர்ப்பிக்க முன்வந்துள்ளேன்.

என்றும் போல இந்த ஆண்டிலும் நமது பள்ளி இறைவனருளால் சிறப்புடன் தனது பணியை ஆற்றி வந்திருக்கின்றது.

நமது பள்ளியின் மாணவர் தொகை 552. எப்பொழுதும் வருடத் துவக்கத்தில் இடவசதிக்கு அதிகமாகவே மாணவரின் விண்ணப்பங்கள் வந்து குவிகின்றன. சில வகுப்புக்களில் குறிப்பிட்ட தொகைக்கு அதிகமாகவே மாணவர்களை கல்வி அதிகாரியின் உத்தரவுடன் அநுமதித்திருக்கிறோம். நமது பள்ளியின் பெருமையையும் ஒழுங்கையும் கண்டு பெற்றோரில் பலர் தம் மக்களை இப் பள்ளியிலேயே சேர்க்க விரும்புவது குறிப்பிடத் தக்கது. அவர்களது விருப்பத்தைக் கூடியவரையில் பூர்த்தி செய்து வந்துள்ளோம். சில சமயங்களில் முடியாமல் போய் விட்டதைக் குறித்து வருந்துகிறோம்.

சென்ற ஆண்டில் நமது பள்ளியில் சேவை புரிந்துவந்த தலைமை ஆசிரியர் திரு. S. தேவயிரக்கம் M. A. L. T. அவர்கள், உதவி ஆசிரியர்கள் திரு. வி. சாரங்கபாணி அவர்கள், திரு. செல்வராஜ் அவர்கள், திரு. அருமை நாயகம் அவர்கள், திரு. பால்வின்ஸன்ட் அவர்கள், திரு. சுந்தரமகாலிங்கம் அவர்கள், திரு. சுருளியாண்டி அவர்கள், திரு. இராமகிருஷ்ணன் அவர்கள் முதலியோர் இப்பள்ளியை விட்டு வேறிடம் சென்றுள்ளனர். அவர்கள் நமக்குச் செய்த

சேவையை பெரிதும் பாராட்டுகிறோம். அவர்களுக்குப் பின்னர் திரு. சாமுவேல் துரைராஜ் M. A. B. T. அவர்கள் தலைமை ஆசிரிய ராகவும், திரு. ராமதாஸ், திரு. ஐஸக்ஜீவகன், திரு கதிர்வேல்பாண்டி யன் என்பவர்கள் உதவி ஆசிரியர்களாகவும் திரு. ராமசாமி அவர்கள் ஹிந்தி உபாத்தியாயராகவும், புரொபஸர் கார்த்திகேயன் அவர்கள் உடற்பயிற்சி ஆசிரியராகவும் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

இப் பள்ளியில் நாடார் குல மாணவர், மாணவிகளுக்கு இலவசக் கல்வி வழங்கப்படுகிறது. ஹரிஜன மாணவர்களும் இலவசக் கல்வி பெறுகின்றனர். இம் முறையில் 65 சதவீத மாணவ மாணவிகள் சலுகை பெறுகின்றனர்.

கடந்த S. S. L. C. பரீட்சையில் நமது மாணவர்கள் பெரும் அளவில் வெற்றியடைந்தனர். 61 பேர்களில் 50 பேர் தேர்ச்சிபெற்றனர். அதாவது 81 சதவீதமாகும். இந்த வெற்றிக் காக கல்வி இலாகா டைரக்டர் தமது மிகுந்த மகிழ்ச்சியைத் தெரிவித்திருக்கிறார். ஆசிரியர்களது அரிய உழைப்பும் மாணவர் களின் ஆர்வமும் இதற்குக் காரணம். இத்தகைய வெற்றிக்கு அவர்களை மிகவும் பாராட்டுகிறோம்.

தற்போதைய சீர்திருத்தக் கல்வித் திட்டத்தை நன்கு கவனித்து நடத்திவருகின்றோம். மாணவர்களும், பலவகையில் பலன் பெறுகிறார்கள் என்று நம்புகிறோம்.

குடிமைப் பயிற்சி மூலமாய் தேசீய உணர்ச்சி, பொறுப்பு உணர்ச்சி, பிறர் உரிமைகளைப் பாதுகாத்தல், முதலிய உயர்ந்த நோக்கங்களில் மாணவர் பயிற்சி பெறுகின்றனர். தங்கள் வாழ்க்கையில் இவைகளைப் பயன் படுத்திக்கொள்வார்கள் என்பதில் சந்தேகமில்லை. நமது பள்ளியில் நடைபெறும் குடிமைப் பயிற்சிபற்றி கனம் கல்வி அதிகாரி அவர்களும் தமது அறிக்கையில் "குடிமைப் பயிற்சித்திட்டம் அரசாங்கக் கல்வித் திட்டத்தின்படி இயன்ற வரையில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது" என்று கூறியுள்ளார்.

சமுதாயக் கல்வி மூலம் புத்தக அறிவோடு, மாணவர் தாமே சில பயிற்சிகளையும் சோதனைகளையும் செய்து தங்கள் அறிவை விரிவுபடுத்திக் கொள்ளுகிறார்கள். கல்வி சம்பந்தமான உல்லாசப் பிரயாணங்கள் அவ்வப்போது நடத்தப்பட்டுவருகிறது.

புதுக் கல்வித் திட்டம் கீழ் வகுப்புக்களில் கைத்தொழிலை அடிப்படையாகக் கொண்டிருத்தலால் நமது பள்ளியில் விவசாயத் தொழிலை சிறந்த முறையில் நடத்தி மாணவர்க்குப் பயிற்சி அளித்து வருகின்றோம். மேல் வகுப்புக்களில், மாணவர் பிற்கால வாழ்வின் ஓய்வு நேரங்களைப் பயன் படுத்தும் பொருட்டு சில வேலைகளைக் கல்வித் திட்டத்தில் சேர்த்திருத்தல் பற்றி அவர்களுக்கு, தோட்ட வேலை, வலை பின்னுதல், பை பின்னுதல், தேனீ வளர்த்தல், முதலியவைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது

மாணவர் பேச்சுத்திறமையிலும், சிந்திப்பதிலும், விருத்தி யடைவதற்காக ஒவ்வொரு வகுப்பிலும் மாணவர் மன்றங்கள் உண்டு. வாரத்திற்கு ஒரு முறை இவைகள் நடைபெறுகின்றன. கட்டுரைகள் கவிதைகள் எழுதவும் தமது கருத்துக்களை வெளியிடவும் மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக ஒவ்வொரு வகுப்பிலும், மாதாந்தரப் பத்திரிக்கைகள் மாணவர்களாலேயே கையால் எழுதப்பட்டு வெளியிடப்பட்டு வருகின்றன. வரும் மாதத்தில் பள்ளியின் ஆண்டு மலர் ஒன்று மாணவர்களைக்கொண்டு தயாரித்து அச்சிட்டு வெளியிடலாமென்று திட்டம் போட்டு அதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

உடற்பயிற்சிக்கான விஷயங்களில் மாணவர் ஊக்கங் காட்டி வருகின்றனர். நமது ஜில்லா விளையாட்டுப் போட்டிகளில் கலந்து சில விளையாட்டுக்களில் மாணவர் வெற்றி பெற்றுள்ளனர்.

நமது பள்ளியில் சுமார் 100 மாணவிகள் கல்வி பயின்று வருகிறார்கள். பெண் கல்வியின் ஆர்வத்திற்கு இது ஓர் தகுந்த சான்றாகும். அவர்கள் பிற்கால வாழ்க்கைக்குத் தகுந்த தையல் வேலை முதலியவற்றிலும் விளையாட்டுக்களிலும் பயிற்சி அளிக்கப் படுகின்றனர்.

பொதுவாக கல்வியதிகாரி நமது பள்ளியைப்பற்றி, "இப்பள்ளி, சென்ற ஆண்டுகளைப் போலவே சிறிய தொண்டாற்றி பள்ளியின் உயர்ந்த நோக்கத்தை உறுதிப்படுத்தி வருகின்றது" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இதுவரை பள்ளியின் வளர்ச்சியைக் குறிப்பிட்டோம். மேலும் பள்ளி உயர மிகவும் தேவையானது மாணவர் விடுதி ஒன்று. தற்போது சுமார் 60 மாணவர்கள் அயல் ஊர்களில் இருந்து வந்து கல்வி பயிலுகின்றார்கள். அவர்கள் தங்க வசதி இல்லாமல் அல்லல் படுகின்றனர். தினமும் தங்கள் கிராமங்களுக்கு நடந்தும் சைக்கிள்களில் சென்றும் திரும்புவதால் ஏற்படும் கஷ்டம் அதிகம். ஆகவே அம் மாணவர் இனிது அமர்ந்து சிறப்புறக் கல்வி பயில ஒரு மாணவர் விடுதி மிகவும் அவசியம். ஆதலின் இவ் ஊரிலுள்ள தனவான்களில் ஒருவரோ அல்லது பலர் சேர்ந்தோ இதற்காக ஒரு கட்டிடம் கொடுக்க முன்வந்தால் அது மிகவும் மேன்மை வாய்ந்த நன்கொடையாகும் பல மாணவரின் நன்றிக்கு உரித்தாகும். இந்த வேண்டுகோள் வீணாகாது என்று நம்பி இதை உங்கள் முன் சமர்ப்பிக்கிறேன்.

தங்கள் முயற்சி எவ்வளவேயினும் குறையாமல் கடமையில் விசுவாசம் கொண்டு தளராத உற்சாகத்தோடு உழைத்து வரும் ஆசிரியர் எல்லோருக்கும் எனது நன்றியைச் செலுத்திக் கொள்கிறேன்.

எங்கள் அழைப்பிற் கிணங்கி பல அலுவல்களுக்கு இடையே தலைமைதாங்க முன் வந்து எங்களுக்குப் பெருமையளித்த கனம் தலைவர் அவர்களுக்கும், பரிசு வழங்க இசைந்த கனம் ஒயிட் அம்மையாருக்கும் எங்கள் மனப்பூர்வமான நன்றி உரித்தாகுக.

இந்த நாளை உற்சாகத்துடன் கொண்டாட உதவி புரிந்த நன்கொடையாளர்களுக்கும் பள்ளியின் நலனை சிரமேற்கொண்டு நிர்வகிக்கும் மேனேஜிங் கமிட்டி அங்கத்தினர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

# பள்ளி மாணவன் அறிக்கை.

---

கடந்த மூன்று ஆண்டுகளாக நமது பள்ளி புதிய கல்வித் திட்டத்தின்படி நடந்து வருகிறது. இத்திட்டத்தின்படி மாணவர்களுக்குப் புதிய உரிமைகளும், கடமைகளும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதன் பிரகாரம் பள்ளியானது மாணவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அடங்கிய ஒரு பள்ளி அரசாங்கம் நடந்து வருகிறது.

ஒவ்வொரு வகுப்பினது முன்னேற்றங்களைக்கவனிப்பதற்கு மாணவர்கள் அநேக குழுக்களாகக் பிரிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு குழுவுக்கும் அவ்வக் குழுவினரால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் இருக்கிறார். குழுத் தலைவர்கள் சேர்ந்த வகுப்புக் கவுன்சில் வகுப்பினது பொதுக் காரியங்களைக் கவனிக்கிறது. ஒவ்வொரு வகுப்பினது தலைவரே வகுப்புக் கவுன்சிலின் தலைவராவார். எல்லா வகுப்புத் தலைவர்களையும் ஒற்றுமையுடன் நடத்தப் பள்ளி மாணவர் தலைவர் ஒருவர் இருக்கிறார்.

ஒவ்வொரு வகுப்பின் குழுக்களும் ஒவ்வொரு வகுப்பு அலுவலை மேற்கொண்டு குழுத் தலைவனுக்குக் கீழ்ப்பட்டு வேலை செய்து வருகின்றன. மாதாமாதம் ஒவ்வொரு வகுப்பும ஒவ்வொரு பத்திரிகை வெளியிடும். அப் பத்திரிக்கையின் ஆசிரியர்கள் மாணவர்களே. எல்லா வகுப்புக்களிலும் மாணவர்களாலேயே சேர்க்கப்பட்டு நடத்தப்படுகிற நூல்நிலையம் உள்ளது. மாணவர்கள் அந்நூல்களைப் படித்துப் பொது அறிவைப் பெரிதும் வளர்த்துக் கொள்கின்றனர். வகுப்பினை மாணவர்கள் பெரியோர்களின் பொன்மொழிகளை மாணவரின் எண்ணங்கட்குக் கொண்டு வருவதற்கு எழுதி வகுப்பினை அலங்கரிககின்றனர். வகுப்பில் மாணவர்கள் சுத்தமாக வருதல், வகுப்பறையைத் தினந்தோறும் சுத்தம் செய்தல், முதலிய சுகாதாரங்களை அந்தந்த வகுப்பு

மாணவர்களே கவனித்துக் கொள்கின்றனர். சாதாரணமாகக் கிடைக்காததும், மாணவர்கட்கு உபயோகமானதுமான பல பொருட்களை வெவ்வேறிடங்களிலிருந்து மாணவர்கள் சேகரித்து வைத்துள்ள பொருட் காட்சிச் சாலையொன்று வகுப்பு தோறும் காணலாம்.

ஆஜர்பதிவு சம்பந்தப்பட்ட வேலைகளையும் மாணவர்களே கவனித்து வருகின்றனர். வருங்காலத்தில் சேமிப்பு முறையைப் பழகும் பொருட்டு மாணவர் சேமிப்புத்திட்டம் ஏற்படுத்தப்பட்டு பெரும் பலன் அளித்துள்ளது பள்ளி முழுவதும் உள்ள மாணவர்களின் சேமிப்புத் தொகை சுமார் ரூ 500 ஆகும். மாணவரின் வாக்கு வன்மையையும் நூலறிவினையும் வளரச்செய்யும் பொருட்டு மாணவர் இலக்கிய விவாத சங்கம் ஒவ்வொரு புதன் கிழமையன்றும் ஒவ்வொரு வகுப்பிலும் நடத்தப்படுகிறது. மாணவர் இக் கூட்டங்களில் ஆர்வமுடன் கலந்து பிற நாட்டு மக்களின் பழக்க வழக்கங்கள், உலக நிலைமை, பழைய சரித்திரி உண்மைகள் என்பன வற்றைப் பற்றிப் பேசியும் பலபொருட்களைப் பற்றி விவாதித்தும் தத்தம் வாதவன்மை, வாக்கு வன்மை, இவற்றைப் பெரிதும் வளர்த்துக் கொள்கின்றனர். வகுப்பின் அமைதியையும் ஒழுங்கையும் பாதுகாக்க நீதி வழங்கும் குழு ஒன்று ஒவ்வொரு வகுப்பிலும் உண்டு. இந் நீதிமன்றம் குழுத் தலைவர்கள் அனுப்பும் புகார்களை தீரவுணர்ந்து நீதி வழங்கி வருகிறது.

இக் குழுக்கள் திறமையுடன் வேலை செய்து வகுப்பைப் போட்டியுடன் முன்னேற்றும் பொருட்டுத் தலைமை யாசிரியர் அவர்கள் மாதந் தோறும ஒவ்வொரு வகுப்பையும் பார்வையிட்டு சிறந்த வகுப்பிற்குப் பதக்கங்கள் வழங்கி வருகிறார்.

இவ்வாண்டு நாங்கள் வேற்று மொழி பேசப்படும் திருவனந்தபுரத்திற்கு நீண்டதொரு உல்லாசப் பிரயாணம் போனோம். அப்போது சரித்திர சம்பந்தப்பட்ட இடங்களையும், விஞ்ஞான ஆராய்ச்சிக்குரிய பல பொருட்களையும் கண்கவரும் வனப்புக்களையும் ஆங்காங்கே கண்டு களித்து உணர்ந்தோம்.

வழியில் பல தொழிற்சாலைகளையும், தொழில்களையும் நேரில் கண்டோம். இதுவேயன்றி ஒவ்வோர் வகுப்பும் அருகிலுள்ள இடங்கட்கு உல்லாசப் பிரயாணம் செய்துள்ளது.

எங்கள் பள்ளி அரசாங்கத்திற்கு ஒரு பாராளுமன்றம் உள்ளது. அதன் அங்கத்தினர்கள் பள்ளி மாணவர்களால் வோட்டுச் செய்யப்பட்டுத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர். அங்கத்தினர்களால் சபாநாயகர் ஒருவர் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார். பள்ளி மாணவத் தலைவரே பிரதம மந்திரியாவார். பிரதம மந்திரி பல இலாக்காக்களைக் கவனித்து நடத்துவதற்காக ஏழு துணை மந்திரிகளைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார். எங்கள் பாராளுமன்றம் கனம் ஜில்லாக் கல்வியதிகாரி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. டாக்டர் கலிபா அவர்கள் எங்கள் பாராளு மன்ற அழைப்பிற்கிணங்கி எங்கள் மன்றத்தில் க்ஷயரோகத் தடுப்புப்பற்றி அரிய சொற்பொழிவு நிகழ்த்தினர். எங்கள் பாராளுமன்றம் மாணவர்கட்குத் தேவையான காரியங்களைப் பற்றிய தீர்மானம் கொண்டுவந்து சட்டமாக்கி அமுலுக்குக் கொண்டுவருகிறது.

எங்கள் பள்ளியின் மாணவர்கள் ஒற்றுமையாகவும் ஒழுக்கமாகவும் நடந்துவருகின்றனர். மேலும் பொதுச் சேவையிலும் ஈடுபட்டிருக்கின்றனர். உதாரணமாக அஸ்ஸாம் பூகம்ப நிவாரண நிதிக்காக மாணவர்களால் ரூ. 50 வசூலிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது. நாட்டு முக்கிய தினங்களில் எங்கள் பள்ளியில் பல கோரிக்கைகள் மாணவர்கள் நடத்தினர். மாணவர் யாவருமே இதில் ஒத்துழைத்து வருகின்றனர். முக்கிய விஷயங்களில் தலைமையாசிரியர் அவர்கள் எங்களுக்கு உதவிபுரிவார். நாங்கள் இவ்வாறு பல உரிமைகளையும் நல்ல கடமைகளையும் பெற்று மாணவர் நல்ல பள்ளிவாழ்வு நடத்தக் காரணமாயுள்ள அரசாங்கத்துக்கும் ஆசிரியர்கட்கும எங்கள் மனமார்ந்த நன்றியை மாணவர் சார்பாகத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

வணக்கம்.

A. தங்கச்சாமி.

மாணவர் தலைவன்.

# எஸ். பி. கே. உயர்தர வித்தியாசாலை

## மாணவிகள் சங்க ஆண்டு அறிக்கை 50-51.

இப் பள்ளி மாணவிகளாகிய நாங்கள் எங்கள் கௌன்ஸிலர் திருமதி. கிரேஸ் பொன்னுசாமி அம்மையாரின் ஆலோசனைகளால் நடத்தப்பட்டு 10 கூட்டங்களை வெகு சிறப்பாக நடத்தினோம்.

இக் கழகக் கூட்டங்களில் I FORM மாணவிகள் முதல் VI FORM மாணவிகள் வரையிலும் உற்சாகமாகப் பங்கெடுத்தனர். தர்க்கம், பாட்டு, நடனம், கும்மி, சமைத்துப் பார், கருப்பு மந்திரம், பழமொழி, செய்யுள் முதலிய பல வகைப்பட்ட நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. எங்கள் கழகம் முந்தின வருடங்களை விட வெகு முன்னேற்றம் அடைந்து பல வகையிலும் சிறப்புற்றிருந்தது என்றும், அதற்குக் காரணம் எங்கள் தலைமை ஆசிரியரின் பலவித உதவிகளும், ஆலோசனைகளும் ஆகும் என்பதையும் நாங்கள் வெகு சந்தோஷத்துடனும், நன்றியுடனும் தெரிவித்துக்கொள்கிறோம்.

எங்களது கழகங்கள் கீழ்வரும் தலைவர்களின் கீழ் வெகு விமரிசையாகவும், திறமையுடனும் நடத்தப்பட்டது.

Mr. Samuel Durairaj M. A. B. T., Head Master, S. B. K. High School, Mrs. Hepzibah Samuel B. A., Mrs. Grace Ponnusamy, திருமதிகள் P. ஞான மணி, R. அமிர்த வல்லி, S. ரூபி, D. தன மணி, D. ரோஸி பாய், R. சுந்தர வல்லி, S. அன்ன பூரணம் என்பவர்கள் ஆவார்கள்.

Mrs. H. Samuel அவர்கள் தங்கள் முடிவுரையிலே ஒரு நாடு முன்னேற்றம் அடைவது ஒவ்வொரு பெண்ணை அதிகம்

பொறுத்தது என்றும், ஆகையால் நாட்டிற்குச் சேவை செய்ய விரும்பும் ஒவ்வொரு பெண்ணும் முதலாவது தன் வீட்டையும், வீட்டின் சுற்றுப்புறத்தையும் சுத்தமாக வைக்கப் பழக வேண்டும் என்றும், அப்பொழுது தான் ஓர் நாட்டின் சுகாதாரத்தை அவர்கள் கவனிக்க முடியும் என்றும் விளங்க எடுத்துக் கூறினர்.

கனம் தலைமை ஆசிரியர் அவர்கள் தங்கள் முடிவுரையில் பெண்களுக்குக் கல்வி அதிகம் அவசியம் என்றும், அது எவ்வித கல்வியாயிருந்தாலும் பெண்மைக்குப் பங்கம் வராமல் இருந்தால் அதுவே போற்றத்தக்கது என்றும், பெண்கள் பேச்சு, நடத்தை ஒவ்வொன்றிலும் ஒழுக்கத்தில் மிக்கவர்களாய் விளங்க வேண்டும் எனவும் தெளிவுறப் போதித்தார்.

இப் பள்ளி மாணவிகளாகிய நாங்கள், பெண்களுக்குத் தேவையான தையல் வேலைகளையும், பலவகைப் பூ வேலைகளையும், வெட்டுக்களையும் கற்றுக்கொண்டோம் என்பதையும் அதிக ஆனந்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். இவ்வருடம் நாங்கள் சகலவிதக் கலைகளிலும் சிறந்து விளங்க எங்கள் பள்ளிக்கூடத்து ஒவ்வொரு ஆசிரியர்களும் எங்களுக்குத் தக்க பயிற்சிகளும், உதவிகளும், ஆலோசனைகளும் அளித்து வந்துள்ளனர். ஆகையால் எங்கள் அன்புமிக்க ஆசிரியர் அனைவர்க்கும் எங்கள் ஆழ்ந்த நன்றியை இச் சங்கத்தின் சார்பாகச் செலுத்திக் கொள்ளுகிறோம்.

எங்கள் இப் பெண்கழகமானது மென்மேலும் வளர்ந்தோங்க எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராகுக!

அருப்புக்கோட்டை — Grace Ponnusamy, Ruby Samuel

19—3—51. — கௌன்ஸிலர். — சி. கனகமணி

காரியதரிசிகள்.

CONNEMARA PUBLIC LIBRARY
1 - JUN 1955
MADRAS

# S. B. K. HIGH SCHOOL,

## Physical education Report.

---

நமது பாடசாலையின் ஒவ்வொரு வகுப்பு மாணவர்களும் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டிருக்கின்றனர். ஒவ்வொரு பிரிவுக்கும் ஒரு பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. தாகூர், பாரதி, நாயுடு, காமா — இவ்வாறு பிரிக்கப்பட்டுள்ள சிறு பிரிவுகள் சேர்ந்த பாடசாலையின் மாணவர்கள் எல்லாருமே நான்கு பெரும் பெரும் பிரிவுகளாய் பிரிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு சிறு பிரிவுக்கும் ஒரு தலைவன் உண்டு. ஒவ்வொரு பெரும் பிரிவுக்கும் ஒரு தலைவன் உண்டு. இந்த நான்கு பிரிவுகளில் காமா பிரிவே இவ்வருஷம் எல்லா விளையாட்டுகளிலும் சிறந்து காணப்பட்டுள்ளது.

பாடத்திட்டத்தில் காணப்படும் தேகப் பயிற்சியுடன், மல்யுத்தம், சிலம்பம் முதலானவைகளும் நமது பாடசாலையில் கற்பிக்கப்படுகின்றன. எல்லா மாணவர்களும் பாரலல் பார் "Parellel bar" விளையாட்டுகளில் உற்சாகம் காட்டி வந்திருக்கின்றனர். இது போக யோகாசனம் முதலியவற்றிலும் பயிற்சியளிக்கப்பட்டு வருகின்றது.

இவ்வருஷம் நடந்த வருஷாந்திர போட்டிப் பந்தய விளையாட்டுகளில் அநேக மாணவர் பங்கெடுத்தனர். எல்லா விளையாட்டுகளிலும் முதன்மையானவர்களுக்குப் பரிசுகளும்,

சர்ட்டிபிகேட்டுகளும் கொடுக்கப்பட்டன. போட்டிகளில் பங்கெடுத்தது K. பச்சய்யன், ரா. நெப்போலியன், த. முத்துசுவாமி என்பவர்கள் முறையே, சீனியர், இன்டர்மீடியற், ஜூனியர் சேம்பியன்களாக வந்துள்ளனர்.

இவ்வருஷம் ஜில்லாப் போட்டிப் பந்தய விளையாட்டுகளில் நமது பாடசாலை மாணவர் **Basket ball, Badminton, Chadugudu** முதலிய விளையாட்டுகளில் கலந்து கொண்டனர். இதில் சடுகுடு விளையாட்டில் நம் பாடசாலை மாணவர் **Zone final** இல் வெற்றி பெற்றனர். மேலும் **Pole vault** லும், **High Jump** லும் நம் பாடசாலை மாணவர்கள் ஜில்லாவிலே முதன்மையாக இருந்து நம் பாடசாலைக்கு இரண்டு **Championship** வாங்கியதுடன் நமக்கு நான்காவது இடத்தையும் சம்பாதித்துள்ளனர்.

ஒவ்வொரு வாரத்திலும் இரண்டு நாள் **Mass drill** நடத்தப்படுகிறது.

எல்லா விதமான ரேடியோக்களும்
விற்பனை & ரிப்பேர்

* * * *

குறைந்த சார்ஜில் சிறந்த ஒலி பெருக்கி

* * *

இதர எலக்டிரிக் சாமான்கள், வயரிங்
காண்டிராக்ட்களுக்கு

* * * * *

## எம். எஸ். ராஜன் அன் பிரதர்ஸ்,

எலக்டிரிகல் டீலர்ஸ்,
மெயின் ரோடு, :: அருப்புக்கோட்டை.

## P. M. சின்னச்சாமி

### நாட்டு காய்கனி & மலைக் காய்கனி

★ வியாபாரம் ★

பெரியகடை தெரு, அருப்புக்கோட்டை.

N. B. கல்யாணம் & டின்னர்களுக்கு குறிப்பிட்ட
நேரத்தில் சரக்கு சப்ளை செய்யப்படும்.

✻ எங்களிடம் ✻

திராவிட கழகம் & தி. மு. கழக புஸ்தகங்கள்
விற்கப்படும்.

அன்பன், P. M. சின்னச்சாமி.

# நூல் நிலையங்களுக்குரிய எம் வெளியீடுகள் :

மாணவர்களும் ஆசிரியர்களும், மனம் மகிழ்ந்து வாசித்துப் பயனடை யத்தக்க எம் வெளியீடுகள் அழகிய தாளில் நன்கு திருத்தமுற அச்சியற் றப்பட்டு, விளக்கப் படங்களுடனும் பிற குறிப்புகளுடனும் வெளியிடப் பட்டனவாகும்.

| நூலின் பெயர் | ஆசிரியர் பெயர் | விலை |
|---|---|---|
| 1. ஞானக் கோவை .... | தமிழ் நாட்டுச் சித்தர்கள் | 5—0—0 |
| 2. விக்கிரமாதித்தன் .... | | 4—0—0 |
| 3. மதனகாமராஜன் .... | | 1—8—0 |
| 4. அரிச்சந்திர புராணச்சுருக்கம் | வித்துவான் மே. வீ. வேணு கோபாலப்பிள்ளை விளக்கக் குறிப்புரையுடன் | 2—0—0 |
| 5. தஞ்சை வாணன் கோவை.... | ஷையார் விளக்கக் குறிப்புரை யுடன் | 2—0—0 |
| 6. விசுவநாதன் (அகவற்பா வான் இயன்ற இனிய நாடகம்) .... | C. S. முத்துசாமி ஐயர் | 1—8—0 |
| 7. மறைந்த மாநகர் (அகவற் பாவான் இயன்ற இனிய நாடகம் .... | பண்டித வித்துவான் N கனக ராஜையர், B. O. L., | 1-12—0 |
| 8. விநோதரச மஞ்சரி .... | அஷ்டாவதானம், வீராசாமி செட்டியார். | 4—0—0 |
| 9. நோபெல் பரிசு பெற்ற அறவர் .... | ஹரிஹர இராமச்சந்திரன், B Sc. (Hons.) | 1—4—0 |
| 10. கட்டுரைக் கருவூலம் .... | வித்துவான் S. ஆறுமுக முதலியார் M. O. L., L. T., | 1—4—0 |
| 11. ஆனந்தரங்கம் பிள்ளை .... | R. தேசிகம் பிள்ளை B A, B.L | 1—0—0 |
| 12. பிற நாட்டுப் பேரறிஞர் .... | ஹரிஹர இராமச்சந்திரன், B Sc. (Hons.) | 0-12—0 |

| நூலின் பெயர் | ஆசிரியர் பெயர் | விலை |
|---|---|---|
| 13. நூதன ஆரம்ப ஆங்கில மெகானிக்ஸ் சுயபோதினி | K சேஷாத்திரி அய்யங்கார் | 4—0—0 |
| 14. சிவாஜி விஜயம் .... | நா. கனகராஜையர், B. O. L. | 2—0—0 |
| 15. உழைப்பால்உயர்ந்த ஒருவர் (புக்கர் தி. வாஷிங்குடன் என்பவரின் வரலாறு) .... | Dr. A. C. செட்டியார், M. A., Ph. D. | 0-14—0 |
| 16. கரு உற்பத்தியும் வளர்ச்சியும் .... | டாக்டர் கோ. துரைராசன் H. P. I. M. | 0—8—0 |
| 17. இந்துமத தெய்வகொள்கை | கல்யாணசுந்தரம் பிள்ளை | 2—0—0 |
| 18. ஐக்கியநாடுகளின் அமைப்பு | K. [illegible]வப்பாதுரை M. A. | 1—8—0 |
| 19. [illegible]ஞ்ச தந்திரம் .... | | 1—0—0 |

முகவரி: M. R. அப்பாதுரைப் பிள்ளை, B. A.,
13, முத்தியாலு செட்டி தெரு,
புரசைப்பாக்கம் :: சென்னை—7.


# PURE COFFEE & TEA

குணம் மணம்
நிறைந்த
ஸ்ரீ தேவி காபி & டீ
உபயோகியுங்கள்.

தயாரிப்பவர்கள்:—
ஸ்ரீ தேவி காபி ஒர்க்ஸ்,
நால்கடை பஜார், :: அருப்புக்கோட்டை.

SPORTS! GAMES!

Prizes! Presents!

REMEMBER

# POPLI BROS.,

**Sialkot Sports Emporium**

SPORTS SPECIALISTS

76-77, WEST TOWER STREET

POST BOX No. 101

MADURAI

ALL SPORTS & GAMES REQUISITES

CITIZENSHIP EQUIPMENT

ALWAYS IN STOCK

TROPHIES - SHIELDS - PRIZE CUPS - SILVER MEDALS

WORTHY OF CONFIDENCE FOR

FAIR PRICE AND QUALITY

SERVICE WITH SATISFACTION.

"DEAL DIRECT & SAVE MIDDLEMAN'S PROFIT"

**Head Office & Works, MEERUT U. P.**